Registered No. M. 801

"உழுதுண்டு வாழ்வதற்கொப்பில்லை கண்டீர்
பழுதுண்டு வேறோர் பணிக்கு"

THE . . .

AGRICULTURIST

A Monthly Journal devoted to
Agriculture and its allied Subjects

கிருஷிகன்

ஓர் மாதாந்தர விவசாயப்பத்திரிகை

Vol. 2 } சாதாரண௵ சித்திரை௴ 1௳ { Part. 1
புத்தகம். 2 } 1910௵ ஏப்ரல்௴ 13௳ { பிரதி. 1

Contents

Ourselves 1
Agricultural Implements of South Arcot 2
Some Thoughts on Agricultural and Industrial Exhibitions & Cattle Shows ... 6
Improvement in Cattle ... 9
Hemorrie Septicæmia ... 13
Parts of a Cotton Plant ... 14
News and Notes 16

பொருளடக்கம்

நாம் ... 1
தென்னார்க்காடு விவசாயக் கருவிகள் ... 2
விவசாய கைத்தொழில் பொருட்காக்ஷிகளைப் பற்றியும் கால்நடைக்காக்ஷிகளைப் பற்றியும் சில குறிப்புகள் ... 6
கால்நடைகளின் அபிவிர்த்தி 9
மென்னை அடைப்பான் ... 13
பருத்திச்செடியின் பலபாகங்கள் ... 14
குறிப்புகள் ... 16

வருஷசந்தா தபால்கூலி உள்பட அணா 12
Annual Subscription including Postage As. 12 only

Edited and Published by
J. R. RANGA RAJU,
5, Mount Road, Madras

[All Rights reserved]

இதைச் சற்றுக் கவனியுங்கள்

தென்காசி
24—2—1910

பிரியமான ஐயா,

தாங்களனுப்பிய "சந்திரகாந்தா" வென்னும் நாவல் வந்து பார்த்து ஆனந்த சாகரத்திலாழ்ந்தினம். இவ்வித இனிய நூலை எம் பார்வைக் கெட்டச்செய்த கடவுளைப் பல்லாயிரம் கோடிதரம் ஸ்தோத்திரிப்பதோடுகூட தங்களது வாழ்நாள் பூராவாகவேணுமென்பது எமது சித்தாந்தம். இது நிற்க, தங்களால் பிரசுரிக்கப்பெற்ற "இராஜாம்பாள்" என்னும் நாவலை எம் பார்வைக்குக் கொண்டுவர அபேக்ஷிப்பதால் மேற்குறித்த நாவல் பிரதியொன்று அடியிற் காணுமெமது விலாசத்திற்கு உடனே அனுப்ப வேண்டுகின்றனம்.

தங்கள் உண்மையான,

வ. எய்ச். அப்துல்லதீப் சாய்பு,
சைத்சூலமான் தெரு,
தென் காசி (திருநெல்வேலி).

இப்படியே "சந்திரகாந்தா" என்னும் நாவலையும் "இராஜாம்பாள்" என்னும் நாவலையும் வாங்கியவர்கள் அவைகளைப் புகழ்ந்து நூற்றுக்கணக்கான நற்சாக்ஷிப் பத்திரங்களனுப்பியிருக்கிறார்கள். அவையெல்லாம் பிரசுரிக்க இடம் போதாதாகையால் நிறுத்திவிட்டோம். மொத்தத்தில் இந்த இரண்டு நாவல்களை வாசிக்க வாசிக்க, சந்தோஷத்தையும் ஆனந்தத்தையும் மனோஉற்சாகத்தையும் வியப்பையும் கொடுக்குமென்பதில் யாதொரு சந்தேகமுமில்லை.

"சந்திரகாந்தா" விலை அணா 12.
தபால் கூலிவி. பி. கமிஷன் அணா 3 பிரத்தியேகம்.
"இராஜாம்பாள்" விலை அணா 12.
தபால் கூலி வி. பி. கமிஷன் அணா 2 பிரத்தியேகம்.
இந்த இரண்டு அபூர்வமாகிய நாவல்கள்

வேண்டியவர்கள்

ரங்கராஜு அண்ட் பிரதர்ஸ்,
5, மௌண்ட்ரோட், சென்னை.

என்று எழுதி உடனே வி. பி. மூலமாய்ப் பெற்றுக்கொள்ளலாம்.

தயார்! தயார்!! தயார்!!!

பூஸ்திதிகளிலுள்ள நிலத்தைப்பற்றிய சென்னப்பட்டணம்
1908 ௵ 1 வது ஆக்ட்
தமிழிலும், இங்கிலீஷிலும் அச்சிடப்பட்டிருக்கிறது.
தமிழ் காப்பி 1-க்கு விலை அணா 6

இந்த புஸ்தகம் பூஸ்திதிகளையுடைய ஒவ்வொருவரிடத்திலும் அவசியமிருக்கவேண்டியது.

ஜி. சி. லோகநாதம் பிரதர்ஸ்,
மவுண்டுரேட், சென்னை.

THE AGRICULTURIST

A monthly Journal devoted to agriculture and its allied subjects

கிருஷிகன்

ஓர் மாதாந்தர விவசாயப் பத்திரிகை

Vol. 2 புத்தகம் 2	ஸாதாரண௵ சித்திரை௴ 1௳ 1910௵ ஏப்ரல்௴ 13௳	No. 1 பிரதி 1

நாம்

OURSELVES

"கிருஷிகன்" என்னும் நமது பத்திரிகையின் முதல்வருஷம் யாதொரு இடையூறுமில்லாமல் சரிவர தேதி தவறாமல் நடந்தேறிய விஷயம் நமது சந்தாதாரர்களெல்லாம் அறிவார்கள். "கிருஷிகனுக்கு" இப்போது இரண்டாவது வருஷம் ஆரம்பமாகிறது. முதல் வருஷத்தைப்போலவே இந்த இரண்டாவது வருஷத்திலும் நமது பத்திரிகையானது யாதொரு இடையூறுமில்லாமல் நடைபெற வேண்டுமென்று சர்வ சக்தியுள்ள கடவுளைப் பிரார்த்திக்கிறோம். இலாபத்தைக் கருதாமல் நமது தேசத்து விவசாயம் விருத்தியடைய வேண்டும் என்னும் பரோபகார சிந்தையுடன் நாம் "கிருஷிகனை" பிரசுரித்து வருகிறோமென்பதைக் கடவுள் நன்கறிவாராதலால் அவர் கிருஷிகனுக்கு யாதொரு இடையூறும் உண்டாகாதபடி பாதுகாத்துக்கொள்ளுவாரென்று நாம் நம்புகிறோம்.

கிருஷிகருக்கு வேண்டிய ஞானத்தை அப்போதைக்கப்போது உண்டாக்கவும் விவசாய விருத்திக்கு அனுகூலமான நூதன முறைகளையும், நூதன கருவிகளையும், நூதன பயிர்களையும்பற்றி அடிக்கடி எல்லாருக்கும் தெரிவிக்க வேண்டுமென்கிற முக்கிய நோக்கத்தால்தான் இம்மாதாந்தரப் பத்திரிகை ஸ்தாபிக்கப்பட்டதென்றும், இதன் மூலமாகப் பொருள் சம்பாதிக்கவேண்டுமென்ற எண்ணம் எமக்குக் கொஞ்சமேனுமில்லையென்றும், இப்பத்திரிகைக்குப் பிடிக்

கும் காகிதக் கிரயமும் அச்சுக்கூலியும் தபால் செலவும் மட்டும் கிட்டினல் போதுமென்றும், விஷயம் எழுதுவதற்கும் கணக்குகள் வைப்பதற்கும் வெளி ஊர்களுக்குப்போய் பல நூதன முறைகளை ஆராய்வதற்கும் பிடிக்கும் செலவுகள் நமது சொந்தத்திலிருந்து கொடுப்பதற்குத் தயாராயிருப்பதாகவும், ஆகையால் தபால் கூலி உள்பட வருஷ சந்தா அணு 12 வைத்திருப்பதாகவும் முதல் சஞ்சிகையில் தெரிவித்தோம். மேலும் முக்கியமாய் தற்காலத்தில் விவசாயம் செய்பவர்களெல்லாம் அதிக ஏழைகளாயிருப்பதால் அவர்களுக்கு அதிக சந்தா கொடுத்து வாங்குவது முடியாதகாரியமென்று நமக்குத் தெரிந்திருப்பதாலும் குறைந்த சந்தாவில் வேறு விவசாய பத்திரிகைகள் இல்லாமையாலும் ஏழைகளுக்காகவே நாம் சந்தாவைக்குறைத்து வைந்தோமே தவிர வேறு எந்தவிதமான எண்ணத்துடனும் குறைத்து வைக்கவில்லை. இப்போது நமது பத்திரிகையை வாங்கிவரும் சந்தாதாரர்களின் தொகையே நாம் கொண்டிருந்த அபிப்பிராயம் சரியென்பதை நன்கு விளக்குகிறது.

தென்னூர்க்காடு விவசாயக் கருவிகள்

AGRICULTURAL IMPLEMENTS OF SOUTH ARCOT

இந்த ஜில்லாவில் தற்காலத்தில் உபயோகிக்கப்படும் உழவுயந்திரங்களைப்பற்றியும் அவைகளைச் சீர்ப்படுத்துவதால் கிருஷிகர் அதிகப்பயனடையக்கூடுமா வென்பதையும் யோசிப்போம். ஓரிடத்திற்கு அனுகூலப்படக்கூடிய உழவுஇயந்திரங்கள் மற்றோரிடத்துக்கு அனுகூலப்படமாட்டாது. ஒரேவிதமான மண்பாங்குள்ள விடங்களிலெல்லாம் ஒரேவிதமான உழவுஇயந்திரங்கள் உபயோகப்படும். உதாரணமாகப்பருத்திக்கரிசல் நிலங்கள் எந்தெந்த ஜில்லாவிலிருந்தாலும் அங்கெல்லாம் முச்சாண் கொழுவுள்ளதும் அதிகக்கனமும் நீளமுமுள்ள நாட்டுக்கலப்பைகளும், ஜதை யொன்றுக்கு 200-ரூபாய்க்குக் குறையாத விலைமதிப்புள்ள கால் நடைகளும் உபயோகப்பட்டு வருகின்றன. இது இப்படியிருக்க, மணல் கொண்டதும், பசளை மண்ணுகவுமிருக்கு மிடங்களிலெல்லாம் சிறு கொழுவுள்ள இலேசுக் கலப்பைகளும் ஜதை யொன்றுக்கு 50-ரூபாய்க்குக் குறைந்த விலை மதிப்புள்ள கால் நடைகளுமே உபயோகப்படுகின்றன. ஆகையால் ஓரிடத்தில் அதிகப்பயனடைய வேண்டியதற்காக இன்னின்ன உழவு இயந்திரங்களை உபயோகிக்கலாம் என்று தீர்மானிக்கு முன்னதாக அவ்விடத்தின் மண்பாங்கு எப்படிப்பட்டதென்று நன்ருய்க்கவனித்துக்கொள்ளவேண்டும்.

2. தென்னூற்காடு ஜில்லாவில் ஏழுதாலுகாக்கள் இருக்கின்றன. அவைகளின் மண்பாங்கைக் கவனிக்கும்போது சிதம்பரம் தாலூகாவில் சாகுபடியாகும் நிலங்களில் 100-க்கு 47-பங்குகளிக்கொண்ட கரிசல்நிலமாகவும் மற்றப்பங்கு பசளைக்கரிசல்,

பசளைச் செவ்வல், மணல்செவ்வல் மணல்கரிசல் இப்படிச் சில வேறுபாடுடையன வாயுமிருக்கின்றன. கூடலூர் தாலூகாவில் நூற்றுக்கு 28-பங்குபசளைக் கரிசலாகவும், 22-பங்குபசளைச் செவ்வலாகவும்,25-பங்குமணல் செவ்வலாகவும் மற்றபங்குகளிக்கொண்ட கரிசல், மணல்கரிசல் முதலானவைகளாயுமிருக்கின்றன. திருக்கோவிலூர் தாலூகாவிலோ நூற்றுக்கு 59-பங்கு மணல்செவ்வலாகவும், 29-பங்கு பசளைச்செவ்வலாகவும், மீந்தது பசளை மணல் கரிசல் நிலங்களாகவு மிருக்கின்றன. விழுப்புரம் தாலூகாவில் நூற்றுக்கு 40-பங்கு மணல் செவ்வலாகவும், 30-பசளைச் செவ்வலாகவும் 18-பசளைக்கரிசலாகவும் மற்றது களிக்கரிசல் மணல் கரிசல்களாகவுமிருக்கின்றன. திண்டிவனந் தாலூகாவில் கரிசல் நிலங்கள் நூற்றுக்கு 7-பங்கு தான்இருக்கின்றன. அதுவும்களிக்கரிசலாயிருக்கிறது. சாகு படியாகும் நிலங்களில் நூற்றுக்கு 48-பங்கு மணல் செவ்வலாகவும், 41-பங்கு பசளைச்செவ்வலாகவும், 4-பங்கு சுத்த மணலாகவுமிருக்கின்றன. கள்ளக்குறிச்சி தாலூகாவில் நூற்றுக்கு 45-பங்கு பசளைச் செவ்வலாகவும், 37-பங்கு மணல் செவ்வலாகவும், 14-பங்கு பசளைக்கரிசலாகவும், மீந்தது மணல்களிக் கரிசல்களாயிருக்கின்றன. விருத்தாசலம் தாலூகாவிலோ எல்லா விதமான நிலங்களும் காணப்படுகின்றன. நூற்றுக்கு 34-பங்கு களிக்கரிசலாகவும், 29-பங்கு பசளைக்கரிசலாகவும், 20-பங்கு மணல் செவ்வலாகவும், 11-பங்கு பசளைச் செவ்வலாகவும், 6-பங்கு மணல் கரிசலாகவும் இருக்கின்றன.

3. ஜில்லா முழுவதையும் ஒன்றாய்ச் சேர்த்துப் பார்த்தால் சாகுபடியாகும் நிலங்களில் நூற்றுக்கு 40-பங்கு மணல் செவ்வலாகவும், 27-பங்கு பசளைச் செவ்வலாகவும், 14-பங்கு பசளைக் கரிசலாகவும், 13-பங்கு களிக்கரிசலாகவும், மற்றது வெண்மணல் கருவடிமணல் நிலங்கள் ஆகவுமிருக்கின்றன. இதனால் இந்த ஜில்லாவில் சாகுபடியாகும் நிலங்கள் முழுவதிலும் நூற்றுக்கு 13-பங்கு தான் களிக்கொண்ட கடினமான நிலங்கள் என்பதாய் வெளியாகும். மற்றவைகளெல்லாம் கரிசல் அல்லது செவ்வல் பசளை மண்ணாகவும் மணலாகவுமே யிருக்கின்றன. இந்த ஜில்லாவிலுள்ள கிருஷிகர் இவ்விஷயத்தை நன்றாய்க் கவனிக்கவேண்டும். இந்தக் காரணத்தினாலேயே இந்த ஜில்லாவில் அனேகமாய் இலேசான சிறு கலப்பைகளே உபயோகிக்கப்பட்டு வருகின்றன. கடினமான கரிசல் நிலங்கள் அதிகமாயுள்ள ஜில்லாக்களில் உபயோகிக்கப்படும் கனத்த முச்சாண் காட்டுக்கலப்பை, குண்டகா, தந்துவு, பெத்தமடகா முதலான பெரிய உழவு கருவிகளில் ஒன்றும் இங்கு காணமுடியாது. இதைவைத்தே இந்த ஜில்லாவில் அனேகமாய் இலகு மண் நிலங்களாயிருக்கின்றனவென்று யூகித்துக்கொள்ளலாம்.

விவசாயக் கருவிகளில் முதலானதும் முக்கியமானதும் கல

ப்பை. நிலத்தைக் கிளறிப்பொடித்துக் காற்றூடவிட்டுப் பண்படுத்தி விதை யூன்றுவதற்கு லாயக்காகும்படி செய்வதும், விதை முளைத்துப் பயிர் வளரும்போது அந்தப் பயிருக்கு வேண்டிய உணவைப் பக்குவப்படுத்துவதும் உழவின் முதற் பயன்களாகும். சாதாரணமாக அனேக விடங்களில் மேல் மண்ணைவிட அடிமண் அதிகச் சத்துள்ளதாயிருக்கும். ஆனால் அது காற்றோட்டமில்லாமல் சரியாய்ப் பக்குவப்படாமலிருக்கும். அதைக் கலப்பையால் உழுது காற்றூடவிட்டால் நிலவளம் அதிகப்படும். மேலும் ஆழ உழுத நிலத்திலிட்ட பயிரின் வேர்கள் அதிக ஆழமாய்ச் சென்று வியாபித்து அங்குள்ள பயிருணவையும் தண்ணீரையும் அருந்தும். வேர்கள் ஆழத்தில் சென்றிருப்பதால் நெடுநாளைக்கு மழையில்லாமல் போனாலும் பயிர்கள் சீக்கிரத்தில் பட்டுக்கெட்டுப் போகாது. அதிக நாளைக்கு நிலத்தில் ஈரந்தங்கும். மேலும் அதிக ஆழமாய் உழுதால் மழைபெய்யும்போது அதிகமான தண்ணீர் நிலத்தில் தங்கும். இல்லாவிட்டால் மழைத்தண்ணீரில் அதிக பாகம் மேலே தேங்கி வடிந்துபோகும். இவ்விதமாக அதிகப் பயனுண்டாகும்படியாய் உழவு நடத்த நம்முடைய சிறு நாட்டுக்கலப்பையால் முடியாது.

உழவின் மற்றொரு பயன் என்னவெனில், நமது நிலங்களில் அபரிமிதமாய் உண்டாகிப் பயிர்களை நெருக்கிக் கொல்லுங் களைப் பூண்டுகளை வேருடன் களைந்து நீக்குவது. இந்தக் காரியத்தைச் சரியாய்ச் செய்யவும் நமது நாட்டுக்கலப்பையால் இயலாது. அறுகு பற்றிய வயல்களில் நாட்டுக்கலப்பையால் உழுதால் அதன் கொழுவும் உள் நுழையாது. கீச்சிக்கொண்டே போகும்.

மேலும் ஒரு ஏக்கர் நிலத்தை நாட்டுக்கலப்பையால் சரியாய் உழுவதற்கு 8-தரமாவது மாறி மாறி உழவேண்டியது அவசியம். இதனால் காலதாமத மாவதுமன்றி உழவுகூலியும் அதிகமாகும். மழைபெய்து புன்செய் நிலங்களில் விதைப்புக்குப் பருவம் வரும்போது நாட்டுக்கலப்பையால் உழுதால் கொஞ்ச நிலங்கள்தான் விதைப்பாகும். சில தினங்களில் பருவம் காய்ந்துபோவதால் அதற்குப்பின் விதைக்கமுடியாமல் போகும். இந்தக் காரணத்தினால் மழை பெய்தவுடன் எவ்வளவு அதிகமான விஸ்தீரணத்தை உழக்கூடுமோ அவ்வளவையும் உழுது விதைத்து விடுவது நல்லது. இதற்கு நாட்டுக்கலப்பையின் வேலை போதுமானதல்ல.

ஆகையால் சாதாரணமாகத் தென்னார்க்காடு ஜில்லாவிலுள்ள கிருஷிகர் வைத்திருக்கும் உழவுமாடுகள் இழுக்கக்கூடியதும், நாட்டுக்கலப்பையைவிட அதிகமான வேலை நடத்தக்கூடியதுமான ஒரு கலப்பை இருந்தால் நல்லது. திருநெல்வேலி விவசாய சங்கத்தார் ஒரு இரும்புக்கலப்பை செய்து அந்த ஜில்லாவிலுள்ள கிருஷிகருக்குக் கொடுத்து வருகிறார்கள். அதன் விலை ரூபா 6-4-0 ஆகிறது. அது செய்யும் வேலை நாட்டுக்கலப்பையின் வேலைக்கு நாலு மடங்குக்

குக் குறைவில்லை. நமது அனுபோகத்தில் அந்தக் கலப்பை இலகுமண் நிலங்களிலெல்லாம் வெகு நேர்த்தியான வேலை நடத்து கிறது. சாதாரணமாய் நமது நாட்டில் உபயோகிக்கப்படும் உழவு மாடுகள் சிரமமில்லாமல் அந்தக்கலப்பையை இழுக்கின்றன என் பதில் கொஞ்சமும் சந்தேகமில்லை. நிலத்தைப் புழுதியிலும் சேற்றி லும் ஆக இரண்டு விதத்திலும் உழுவதற்கு அது உதவும். மூன்று அல்லது நான்குதரம் உழுதால் நிலம் சரியாய் பண்பட்டு நிலம் விதைப்புக்கு அல்லது நடுகைக்குப் பக்குவமாயிருக்கும். அதைக் கொண்டு ஒருதரம் அல்லது இரண்டுதரம் உழுதவுடன் நிலத்தைப் பார்த்தால் சாதாரணமான நாட்டுக்கலப்பையால் 6-உழவு செய் ததுபோல் தெரியும். மேல்மண் கீழும் கீழ்மண் மேலுமாய்ப் புரண்டு கலந்து, காற்றாடிச் சரியாய்ப் பயிருணவைப் பக்கு வப்படுத்தும். களைப் பூண்டுகளை வேருடன் களைந்து மடி த்துவிடும். இப்படி எல்லாவகைகளிலும் இந்தக்கலப்பை தென் னார்க்காடு ஜில்லாவிலுள்ள இலகுமண் நிலங்களுக்கு அதிக உப யோகமுள்ளதா யிருக்குமென்பதில் தடையே இல்லை. ஆனால், எடுத்தவுடன் ரூ 6-4-0-கொடுத்து ஒரு கலப்பை வாங்கவேண்டி யதாயிருக்கிறதே யென்று நமது கிருஷிகர் யோசிப்பார்கள். ஆனால் உழவுகாலங்களில் இரண்டு மாதத்தில் எட்டுத்தரம் கொல் லனிடத்தில் கொண்டுபோய் நாட்டுக்கலப்பையின் கொழுவைத் தட்டி நீட்டிப்போட வேண்டியதாயிருக்கிறது. இப்படி இருப்புக் கலப்பையை அடிக்கடிச் சொப்பனிட வேண்டியதில்லை. ஆறுமாதத் துக்கு ஒரு கொழு புதிதாய்ப் போடவேண்டியதாயிருக்கும். முன் கூட்டியே அவைகளை வாங்கிவைத்துக்கொண்டால் நாமே தேய்ந்து போனதற்குப் பதில் கொழுமாட்டிக்கொள்ளலாம்; கொல்லனிடம் போய்க் காத்திருக்கவேண்டிய அவசியமில்லை. மேலும் ஒரு கல ப்பை பத்து வருஷத்துக்கு நீடித்திருக்கும். நாட்டுக் கலப்பையில் வருஷத்துக்கு நான்கு குற்றிகளைப் புதிதாய்ப் போடவேண்டிய தாயிருக்கும்.

இந்த விஷயத்தைக் கவர்ன்மெண்டார் அறிந்து இதைச் சீர் திருத்துவதற்காக அனேகந்தரம் முயற்சி செய்தார்கள். என்றா லும் அவர்கள் செய்த முயற்சி சரியான வழியில் செய்யப்படாத தால் அவைகள் சற்றும் பயன்படாது போயின. நாம் முன்தெரி வித்தபடி இந்த ஜில்லாவிலுள்ள கால் நடைகள் சிரமமில்லாமல் இழுக்கத்தக்கதான கலப்பைகளை நாம் கிருஷிகருக்குக் கொடுக்க வேண்டும். அப்படிச்செய்யாமல், அதிக ஆழமான உழவு நடத்துகின் றனவென்று அதிகக் கனமான சீமைக்கலப்பைகளை அவர்களுக்குக் கொடுக்கக்கூடாது. அவர்கள் என்னசெய்வார்கள்? 1886-ம் வருஷத்தில் கவர்ன்மெண்டார் சில உத்தியோகஸ்தரைச் சிதம்பரம், விழுப்புரம், திண்டிவனம் தாலுகாக்களுக்கு அனுப்பிச் சீமைக்கலப்பைகளின்

உபயோகத்தை அங்குள்ளகுடிகளுக்குக் காட்டும்படி செய்தார்கள். அப்போது கிருஷிகர் 160-சீமைக்கலப்பைகளை வாங்கினார்கள். அவைகளின் விலை கலப்பை ஒன்றுக்கு சுமார் 20-ரூ யெனத்தெரிகிறது. ஒருவருஷத்துக்குப்பின் விசாரித்தபோது அவைகளில் 84-கலப்பைகள் தான் உபயோகத்திலிருந்தன. மற்றவைகளை என்ன செய்தார்களோ தெரியாது. கொஞ்சக்காலங்கழித்து விசாரித்தபோது கிருஷிகர் வாங்கின சீமைக்கலப்பைகளில் ஒன்றாவது உபயோகத்திலில்லை. கிருஷிகரைக்கேட்டால் சீமைக்கலப்பைகள் அதிகக் கனமென்றும், தங்கள் மாடுகள் அவைகளை இழுக்கவில்லை யென்றும், அவைகளை வாங்க அதிகத்தொகை அவசியமாயிருக்கிறதென்றும், அவைகளைச் செப்பனிடுவது வருத்தமென்றும், மாடுகளின் உயரத்துக்கும் நிலத்தினியல்புக்கும் தக்கதாக அவைகளைச் சரிப்படுத்துவது பிரயாசமாயிருந்ததென்றும் இந்தக் காரணங்களால் அக்கலப்பைகளைக் கைவிட்டதாகவும் சொன்னார்கள்.

ஆனால் விருத்தாசலத்திலுள்ள ஒரு பெரியமிராசுதார் மட்டும் நாட்டுக் கலப்பைகளைத் தொடுவதேயில்லையென்றும், அவர் பண்ணையில் 40-இரும்புக்கலப்பைகளை இப்போதும் உபயோகித்து வருகிறார் என்றும், மாசி கம்பெனியாரின் கலப்பையை வாங்கி அதில் தம்முடையமண் பாங்குக்கும் கால் நடைகளுக்கும் தக்கதான சில சீர்திருத்தங்களைச் செய்துகொண்டு அவைகளை யுபயோகித்து வருகிறார் என்றும் வெளியிட்டிருக்கிறார்கள். அவைகளை யிழுப்பதில் அவருடைய கால்நடைகளுக்கு யாதொரு சிறமுமில்லையென்றும் அவ்வூரிலுள்ள சாதாரண கொல்லர்களே அவைகளைச் செப்பனிடுகிறார்களென்றும், அவைகளைக்கொண்டு தமது பண்ணையில் வெகு நேர்த்தியான வேலை நடத்திவருவதாயும் தெரியவருகிறது.

ஆகையால் தென்னார்க்காடு ஜில்லாவிலுள்ள கிருஷிகர் விருத்தாசலத்துக்குப் போய் அங்குள்ள இரும்புக்கலப்பைகளைப் பார்த்து அவைகளைவிட சுலபமாய் இழுக்கக்கூடிய திருநெல்வேலிக் கலப்பைகளை வாங்கி உபயோகித்து அதிகமான பயனை அடைவார்களென்று நம்புகிறோம்.

விவசாய, கைத்தொழில் பொருட்காக்ஷிகளைப் பற்றியும், கால்நடைக்காக்ஷிகளைப்பற்றியும் சில குறிப்புகள்.

SOME THOUGHTS ON AGRICULTURAL AND INDUSTRIAL EXHIBITIONS AND CATTLE SHOWS

(தொடர்ச்சி)

இக்காக்ஷிகளின் முக்கிய பிரயோஜனம் அவைகளில் கொண்டு வந்து காட்டப்படும் பல காக்ஷிப்பொருள்களை அவ்வவைகளுக்குத் தக்க இடங்களில் வரிசைவரிசையாய் ஒழுங்கு பண்ணிவைப்பதானாலேயே உண்டாகும். பக்கத்தில் வைக்கப்படவேண்டிய இரண்டு வஸ்துக்கள் வெவ்வேறிட

ங்களில் வைத்திருப்பார்களானால் அவைகளைப்பார்க்கும் ஜனங்களுக்கு அவ்வளவு பிரயோஜனமுண்டாக மாட்டாது. இதற்காகவே விவசாய விஷயங்களில் விசேஷ அனுபோகமும் பாண்டித்யமுமுள்ள உத்தியோகஸ்தர்களை காக்ஷி வைப்பதற்குக் குறைந்தது ஒருவாரத்துக்கு முன் கூட்டியே வரவழைத்து அவர்களுக்கு வேண்டும் வேலையாட்களையும் குமஸ்தாக்களையும் தயாராய் சித்தப்படுத்தி காக்ஷிப்பொருட்களையும் விவசாயக்கருவிகளையும் கால்நடைகளையும் அவ்வவைகளுக்குக் குறிப்பிட்ட இடத்தில் அதற்கேற்பட்ட வரிசையில் வைக்கும் படிக்கும், அவைகளில் விசேஷப் பொருட்களின் குணங்களையும் சரித்திரத்தையும் எழுதிவைக்கும்படிக்கும் தக்க ஏற்பாடுகள் செய்யவேண்டும். சில பொருட்காக்ஷிகளில் சில நாட்களுக்கு முன் கூட்டியே அயலூர்களிலிருந்து அனுப்பப்படும் பெட்டிகளிலடங்கிய சில வஸ்துக்களைக் காக்ஷி சாலையில் கொண்டுவந்து வைப்பதற்குக் கூட சாவகாசமில்லையென்று சொல்லியும், சில பெட்டிகளைத் திரக்காமலும் போட்டு வைத்திருக்கிறார்கள். எவ்வளவோ சிறமப்பட்டுக் கனவான்கள் அயலூரிலிருந்து சேகரித்து ரெயில்சார்ஜ் கொடுத்துக் காக்ஷியில் வைக்கவேண்டும் என்னும் நோக்கத்துடன் அனுப்பும்பொருட்கள் பெட்டிகளுக்குள் பூட்டியபடியேகிடந்தால் அது எவ்வளவு விசனிக்கத் தக்க காரியமென்று யோசித்துப்பாருங்கள். மேலும் அவைகளில் சிலவற்றை வெளியே எடுத்தும், அவைகளைச்சரியான விடத்தில் வைக்காமலும் எங்கேயாவது ஓரிடத்தில் போட்டு வைப்பது எவ்வளவு பரிதாபமான காரியம்.

சில காக்ஷிகளில் முன் கூட்டிக் காக்ஷிப்பொருட்களை வரிசைப்படுத்தாமல் நாளைக் காலையில் காக்ஷிவைப்பதென்றால் இன்று சாயந்திரம் காக்ஷிப்பொருட்களை வரிசைப்படுத்த ஆரம்பிப்பதை நான் கண்டிருக்கிறேன். காக்ஷியைப் பார்ப்பதற்கென்றுவந்திருக்கும் சிலரை அந்தச் சமயத்தில் நல்லவார்த்தை சொல்லி இப்பொருளை வரிசைப்படுத்தும்படி கேட்டுக்கொண்டும், அவர்கள் இரவெல்லாம் ஊணுறக்கமின்றிப் பாடுபட்டு ஒருவாறு அவைகளை வரிசைப்படுத்தியும் திருப்திகரமாயில்லாததைப் பற்றி விசனமடைவதையும் கண்டிருக்கிறோம். இப்படிக்கௌரவத்துக்குப் பாடுபடும் அநேக கனவான்கள் கஷ்டப்பட்டு உழைத்து வரும்போது அவர்கள் உத்திரவுப்படி வேலைசெய்ய நியமிக்கப் பட்ட கூலியாட்களில் எல்லாரும் சாக்குப்போக்குகள் சொல்லிப் போய் விடுவதையும், அவர்களை மறுபடியும் அழைத்துக்கொண்டு வர மேஸ்திரிகள் ஒருவருமில்லாத படியாலும் மேற்சொன்ன உத்தியோகஸ்தர்கள் தாமே பெட்டிகளையும் சாமான்களையும் கூலியாட்கள் போல எடுத்துச் சுமந்துகொண்டு போய் வைப்பதையும் நாமே கண்ணுற்று வியசனித்திருக்கிறோம். இப்படிப்பட்ட சங்கடங்கள் ஒன்றும் நேரிடாமல் முன் கூட்டியே தக்க ஏற்பாடுகள் செய்து, வேலையாட்களை நேமித்து அவர்களை மேற்பார்த்து வேலைவாங்க மேஸ்திரிகளையும் திட்டப்படுத்தி அக்காக்ஷியை நடத்தும் கனவான்கள் அடிக்கடி அச்சாலையில் நடந்து வரும் வேலையை நேரில் சுற்றிப்பார்த்து மேல் பார்த்து வருவார்களானால், காக்ஷிப்பொருட்களை வரிசைப்படுத்தும் வேலையில் அதிக வருத்த மிராது. இது அற்பவிஷயமென்று நினைத்து அலக்ஷியம் செய்யலாகாது. பொருட்காட்க்ஷிகளில் அனுபோக முள்ளவர்களுக்கே இதின் முக்கியம் நன்றாய் விளங்கும்.

இப்படி வரிசைப்படுத்திய பிற்பாடு அந்தப் பொருட்களை அந்தந்த இடங்களிலிருந்து வேறு இடங்களுக்கு மற்றவர்கள் கொண்டுபோய் வைக்காமலிருக்கும்படி பாதுகாக்கும் பொருட்டுச் சரியான காவல்காரரை

அங்கங்கே நியமிக்கவேண்டும். ஒரு காக்ஷியில் ஒரு விவசாய இலாகாத் தலைவர் அதிகப்பிரயாசையுடன் வரிசைப்படுத்தி வீட்டுக்குச் சாப்பிடச் சென்றிருந்தபோது அந்தப் பொருட்களில் சிலதை ஒன்றும் தெரியாத வேறு சிலர் வேறு இடங்களில் கொண்டுபோய்ப் போட்டுவிட்டது மன்றி, அவ்விடத்துக்குப் பொருத்தமில்லாத மற்றப் பொருட்களை அவ்விடங்களில் வைத்திருப்பதையும், அப்படித் தாங்கள் வரிசைப் படுத்தியதை மற்றவர்கள் கலைத்துவிட்டதற்காக அவ்வுத்தியோகஸ்தர் மன வருத்தமடைந்ததையும் நாம் பார்த்திருக்கிறோம்.

எப்படி முன்கூட்டி ஏற்பாடுகள் செய்திருந்தபோதிலும், நமது தேசத் தவர்களுக்குத் தகுந்த காலத்தில் காரியம் செய்வதாலுண்டாகும் பிரயோ ஜனமும், காலாகாலத்தில் செய்யப்படாத செய்கையின் விபரீதமும் தெளி வாய்த் தெரியாததலால், அநேகர் காக்ஷி நடத்த உத்தேசித்திருக்கும் அந் நாட் காலையிலும் அநேக சாமான்களை யனுப்புவார்கள். அவைகளில் சிறிது வெகு முக்கியமான பொருட்களாயிருக்கும். ஆகையால் இப்படி அதிக நாள் தாமதித்துவரும் பொருட்களையும் கூடிய சீக்கிரத்தில் அதிக வேலை யாட்களின் உதவியால் உடனே வரிசைப்படுத்திவைக்க வேண்டும். இதற்கு முக்கியமாய் வேண்டியது அதிக வேலையாட்களும் அவர்களிடத்தில் வேலை வாங்குவதற்காக வைத்திருக்கும் மேஸ்திரிகளுமே. இந்தத் தத்தரவான சம யத்தில்தான் வேலையாட்க ளில்லாமற்போவது வழக்கம்.

இதுவன்றிச்சிலரால் அனுப்பப்படும் சாமான்களில் அனுப்பினவர்களின் ஊர் பேர் விலாசம் சரியாய்ப்போடாமல், அனுப்பினவர் ஒருவரிருக்க வேறொருவருக்குப் பரிசளிக்கப்பட ஹேதுவாகிறது. பிள்ளையை முதலி யாரென்றும், முதலியாரை நாயுடு என்றும் எழுதிவைப்பதால் அந்த மனி தருக்கு இதனால் மனவருத்தமுண்டாக நேரிடுகிறது. இதையும் முக்கிய மாய்க் கவனிக்கவேண்டும்.

இன்னொரு விஷயம் நமது கவனத்துக்கு வந்தது. அது யாதெனில், தானிய வகைகளைக் காக்ஷிக்கனுப்புவதில் வகைக்கு இரண்டு சேருக்குக் குறையாமல் அனுப்பவேண்டும் என்பதாக ஒரு காக்ஷியின் நோட்டீசில் பிர சுரம் செய்திருந்தனர். திருநெல்வேலியில் நடக்கும் ஒருகாக்ஷிக்கு குண்டூ ரிலிருந்து ஒருவர் சுமார் 100 தினுசு நெல்லனுப்பினுறொன்று வைத்துக் கொண்டால், அவர் 200-படி நெல்லனுப்பவேண்டியதாகுமல்லவா? இவ் வளவு ஜாஸ்தியான அளவு நெல்லின் விலை யென்னவாகிறது? அதை யனுப் பச்செல்லும் ரெயில்சார்ஜ் என்னவாகும்? இவ்வளவு நெல்லையும் வரிசைப் படுத்திவைக்க எவ்வளவு இடம் வேண்டியதாயிருக்கும்? மேலும் இதைத் திரும்பத் தன்னூருக்குக் கொண்டுபோக அவருக்குச் செல்லும் செலவெ ன்ன? இதையெல்லாம் கவனித்தால் அவருக்குக் கிடைக்கும் பரிசு எவ்வ ளவு அற்பமாகும்! இதற்காக சிரமப்பட்டு யாராவது தொலைதூரங்களிலிரு ந்து பொருள்களைக் காக்ஷிகளுக்கனுப்புவார்களா? இப்படிப்பட்ட விஷய ங்களைக் கவனித்துச் சட்டதிட்டங்களை யேற்படுத்தவேண்டும்.

மேலும் காக்ஷிகளை நடத்தும் காலமும் இடமும் அநுகூலப்படத் தக்கனவாகவே இருக்கவேண்டும். ஓரிடத்தில் ஒரு உத்சவகால த்தில் கிருஷிகரிலனேகர் அவ்விடத்தில் கூட ஹேதுவுண்டாகும். அக் காலத்தில் விவசாயக் காக்ஷிப்பொருட்கள் அகப்படக்கூடிய காலமாகவு மிருந்தால், அவ்வுத்ஸவகாலத்தைக் காக்ஷிவைப்பதற்குத் தெரிந்துகொள்வது உசிதமாகும். உதாரணமாகப் பங்குனி உத்தரத்தை யொட்டி திருநெல்வேலி ஜில்லா கழுகுமலை யென்னும் ஊரில் பதினாயிரம் கால் நடைகளுக்குமேல்

வந்துகூடும் சந்தை ஏற்படும். கோவில்பட்டி ரெயில்வே ஸ்டேஷனிலிருந்து அவ்விடம் 12-மைல் தூரமிருக்கிறது. அவ்விடத்தில் சுமார் 5000-கிருஷிகர் ஜில்லாவின் எல்லாப் பக்கங்களிலிருந்தும் கால்நடைகளை வாங்குவதற்கும் விற்பதற்கும் வந்து சேருவார்கள். மற்ற விடங்களுக்கு அக்கிருஷிகரை வருந்தியழைத்தாலும் போகார். இது எல்லாருக்கும் தெரிந்த விஷயம். இப்படிக் கழுகுமலையில் பங்குனி உத்தரகாலத்தில் விவசாயக்காக்ஷியும் கால்நடைக்காக்ஷியும் வைக்க ஏற்பாடு செய்வார்களானால், சிரமப்படாமலே எத்தனையாயிரம் விவசாயிகள் காக்ஷிச் சாலைக்குட் போய்ப்பார்த்து அதன் விசேஷ பிரயோஜனத்தை யடைவார்கள். இப்படியிருக்க பங்குனி உத்திரத்துக்குச் சுமார் ஒரு மாதத்துக்கு முன்கூட்டி கோவில் பட்டியில் காக்ஷி நடத்தப்பட்டது. இதனால் கால்நடைகள் சரியாய் அந்தக் காக்ஷிக்கு வரவில்லை. மேலும் அங்கு வைத்திருந்த அனேகமாயிரம் விவசாயப் பொருள்களை வாஸ்தவத்தில் விவசாய சம்பந்தமுள்ளவர்கள் போய்ப் பார்க்கவும் ஹேதுவில்லாமல் போயிற்று. தற்காலத்தில் கிருஷிகருக்கு காக்ஷிகளின் முக்கியமும் அவைகளுக்குப்போய் வருவதாலுண்டாகும் அநுகூலங்களும் நன்றாய் விளங்கவில்லை. ஆகையால் அவர்கள் நமது முயற்சியின்றித் தாங்களே வந்து கூடுமிடங்களில் காக்ஷிகளை வைத்தால் அவர்கள் தாங்களே போய்ப்பார்த்துப் பலனடைய ஹேதுவாயிருக்கும். கிருஷிகருக்கென்றே காக்ஷிகளை ஏற்படுத்துவது. அவர்கள் ஏராளமாய்க் கூடுமிடங்களுக்கு மற்றவர்கள் போய்வருவது சற்று வருத்தமாயிருக்குமென்பதை யுத்தேசித்தும், சில உத்தியோகஸ்தர்கள் அக்காலத்தில் வந்து போகசௌகரியப்படாதென்பதற்காகவும், இடத்தையும்காலத்தையும் வேறுபடுத்தி வைப்பதால் கிருஷிகருக்கு உண்டாகக்கூடிய பலன் அதிகமாய்க் குறைந்து போகிறது. காக்ஷி யேற்படுத்தும் கனவான்கள் கிருஷிகரின் விருத்தியையே முக்கியமாகக் கருதவேண்டுமேயொழிய, அதற்கு வரும் ஒன்றிரண்டு உத்தியோகஸ்தரின் சௌகரியக்குறைவை உத்தேசிக்கவே கூடாது.

கால்நடைகளின் அபிவிர்த்தி

IMPROVEMENT IN CATTLE.

இந்த வியாசம் கால்நடைகளைப் பற்றியது. கிருஷிகர் அதிகமான கால்நடைகளை வைத்துக் கொண்டால் அவைகளைச் சரியானபடி போஷிக்கவும் சரியானபடி காப்பாற்றவும் சாத்தியப்படாது. ஆகையால் தங்களிடம் கொஞ்சக் கால்நடைகளை வைத்துக்கொண்டால் அவைகளை மேன்மையாய்ப் போஷித்துப் பாதுகாக்கக் கூடியதாகு மன்றி அவைகளை அதிகப் பலமுள்ளவைகளாகவும் உபயோகமுள்ளவையாகவும் ஆக்கலாம். இந்தக்காரணத்தையிட்டுக்கிருஷிகர் தாங்கள்தற்காலத்தில் வைத்திருக்கும் கால்நடைகளில் அனேகத்தைத் தொலைத்துவிட்டுக் கொஞ்சக் கால்நடைகளை வைத்துக்கொள்ளத் தங்கள் மனதில் தீர்மானித்துக்கொள்ளுவதால் தங்கள் கால்நடைகளை விர்த்திசெய்யலாம் என்பது இதை வாசிப்பவர்களுக்கு வெளியாகும். நாட்டுப் புறங்களில் பாதைமார்க்கமாய்ப் பிரயாணஞ்செய்யும் எல்லாரும், முக்கியமாகக் காலை மாலை வேளைகளில், அதிகமான கால்நடைகள் மந்தைமந்தையாய் மேயப்போவதையும், மேய்ச்சலிலிருந்து திரும்பத் தங்கள் கிராமங்களுக்கு வருவதையும் காண்பார்கள். இம்மந்தைகளில் பருமனிலும், குணவிசேஷங்களிலும் அனேக வித்தியாசங்கள் அமைந்த பசுக்களும், கிடாரிகளும், கிழட்டு மாடுகளும், இளங்

காளைகளும் கலந்திருக்கும். இவைகள் அந்தந்தக் கிராமங்களிலுள்ள வயற்காடுகளிலும் மேய்க்கால் நிலங்களிலுமுள்ள அற்ப சொற்பமான புல்லை மேய்ந்து ஜீவிக்கின்றன. மழைக்காலத்திலன்றி மற்றக்காலங் களில் கிராமங்களிலுள்ள எல்லாக் கால்நடைகளுக்கும் போதுமான ஆகாரம் கிடைப்பதில்லை. ஆகையால் அவைகள் பொதுவாக மிக வும் மெலிந்தும் கேவல ஸ்திதியை யடைந்து மிருக்கின்றன. இப்படி யிருக்க அவைகளைக் கிருஷிகர் என் வைத்திருக்கிறார்கள்? இதற்கு அனேக காரணங்களிருக்கின்றன. முதற் காரணம் அவைகளிடத்திலிரு ந்து சாணிகிடைக்கிறது. இந்தச் சாணியை எருவுக்கு உபயோகிப்பதுமன்றி வேறு அனேக காரியங்களுக்கு உபயோகிப்பது நுக்ககரமாயிருக்கி றது. அவைகளை வரட்டிதட்டிக் காயவைத்து விறகுக்குப்பதிலாய் எரிக்கி றார்கள்; சுவர்களிலும் தளத்திலும் கூடைகளிலும் பூசுகிறார்கள். வேறு அனேக காரியங்களுக்கும் உபயோகப்படுத்துகிறார்கள். மேலும் அனேக கிராமங்களில் ஒரு குடியானவன் வைத்திருக்கும் கால்நடைகளின் தொகை க்குத் தக்கதாகவே அவருடைய சம்பத்தும் பொதுவான ஸ்திதியும் மதிக் கப்படுகின்றன. எவ்வளவு கேவல ஸ்திதியிலிருக்கும் கால்நடைகளாயி ருந்தாலும்சரி, ஒருவருக்கு அதிகமான கால் நடைகளில்லாவிட் டால் அவரைக்கேவலமாகவே மதிக்கிறார்கள். இப்படிக் கேவல ஸ்திதி யிலுள்ள கால் நடைகளை யதிகமாய் வைத்திருப்பதால் ஒருவரை கௌரவ முள்ளவராக மதிப்பது பிசகு என்று தெளிவாய் எடுத்துக்காட்டினாலும் ஜனங்கள் மனதில் அது எளிதில் பதிவதில்லை. வெள்ளாடுகளின் கொம்பு தோல் இவைகளைவிட கால்நடைகளின் கொம்பும் தோலும் சற்று தாழ்ந்த தரமுள்ளவையாயினும் அவைகளின் விலை - மதிப்பையும் யோசிக்கவேண்டும். கால் நடைகளில் அனேகத்துக்கு சூடு போட் டிருக்குங் காரணத்தினால் அவைகளின் தோலுக்கு விசேஷமாக குறைவான விலைமதிப்பு எற்படுகிறது. பசுக்கள் கொடுக்கும் பாலின் அளவு மிகக்குறைவு. பொதுவாகப்பசுக்களின் பாலை அவைகளின் கன்று களே குடித்து விடுகின்றன. என்றாலும் சில பசுக்கள் மேய்ச்சலுக்குப் போகுமுன் அவைகளின் பாலைகறந்துக்கொள்கிறார்கள். அனேகமாய்க் கிருஷிகர் நல்ல மேய்ச்சலுள்ள விடங்களில் வர்க்கவிர்த்திக்காகவும், தங்கள் குடும்பத்துக்கு வேண்டிய பால் கறப்பதற்காகவும், வைத்திருக்கும் மேன் மையான கால் நடைகளையும் தாழ்ந்ததரமுள்ள கால் நடைகளுடன் மேய்ந் து வர வெளியே விடுகிறார்கள். கடைசியாய்க் காளைகள் வளர்ந்து அவை களுக்குத் தக்கவயது வந்தபோது அனேக விடங்களில் உழவு முதலிய வேலைகளுக்கு உபயோகிக்கப்படுகின்றன. நல்ல மேய்ச்சல் உள்ள இடங் களில் விசேஷமாய் இப்படிச்செய்கிறார்கள். ஆனாலும் அனேகவிடங் களில் அவைகள் இவ்வேலைக்கு உதவாதபடி அவ்வளவு சிறியவைகளா யிருக்கின்றன.

இவ்விதமாக இந்நாட்டில் அனுஷ்டிக்கும் முறையில் அனுகூலங்களி ருப்பதாகத் தெரிகிறது. அம்முறை சரியானதல்லவென்று நாம் தள்ளு வதற்குமுன் அதிலிருக்கும் பிரதிகூலங்கள் அனுகூலங்களைவிட அதிகப் படுகின்றனவா என்பதை யோசிக்கவேண்டும். முதன்மையானதும் ஸ்பஷ் டமாய்த் தெரிவதுமான பிரதிகூலம் என்னவெனில் கிருஷிகரிடத்திலிருக் கும் கால்நடைகளுக்குத் தீனிபோதாது. அவர்களிடத்திலிருக்கும் தீனி யால் போஷிக்கக்கூடியதற்கு அதிகமான கால் நடைகளிருக்கின்றன. கால் நடைத்தீனி அதிகமாய்த் தேவையாயிருக்கிறது. அற்ப சொற்பமாய்க்

கிடைக்கக்கூடிய புல் முழுவதையும் கால்நடைகள் மேய்ந்து விடுகின்றன. இதனால் சுபிக்ஷக்குறைவான காலங்களில்வேலைசெய்யும் மாடுகளும்பட்டினி கிடக்கவாவது அல்லதுஅரைவயிற்றுத் தீனியுடன் காலங்கழிக்கவாவது நேரிடுகிறது. இதனால் இரண்டுவிதமான கெடுதியுண்டாகிறது. முதலில் கால்நடைகளில் ஒவ்வொன்றும் அதன் ஜீவகாலத்தில் எந்தச்சமயத்திலாவது சரியானபடி போஷிக்கப்படாமல் வருத்தமடைகிறது. இப்படி ஒருதரம் கால்நடைகள் கடும்பசியினால் வருத்தமடைந்துவிட்டால், முக்கியமாக அவைகளின் இளமையில் இப்படி நேரிட்டால் அவைகள் ஒருக்காலும் உரமும் தேக சௌக்கியமும் பலமும் பொருந்திய மாடுகளாகவாவது பால் அதிகமாய்க்கொடுக்கக்கூடிய பசுக்களாகவாவது வளரமுடியாது. நல்ல கால்நடைகளை வர்க்கவிர்த்தி செய்வதில் சித்திபெறவேண்டியதற்கு அவசியமான காரியம் எதுவென்றால் அவைகளின் வளர்ச்சி எந்தக்காலத்திலும் தடைபட்டு நிற்காதபடிநிலவரமாய் விர்த்தியாய்க்கொண்டிருக்கும்படி கவனிப்பது தான். மேலும் இப்படிக்கால்நடைகள் மேயும் நிலங்களிலுண்டாகும் புல்லைத்தரை மட்டத்துக்கு மேய்ந்துவிடுவதால் அநேக விதங்களில் நிலவளம் குறைவுபடுகிறது. (a) மண்ணுக்குள் மடித்துழவு செய்யப்பட வேண்டிய மூல வஸ்துவானது அளவில் குறைவுபடுவது. (b) மேய்கால் நிலங்களில் சாதாரணமாய் உண்டாகும் பூண்டுகளையும் குத்துச்செடிகளையும் மேல் வர வொட்டாமல் செய்வது, இதனால்விறகுக்காக ஜனங்கள் உபயோகிக்கும் வஸ்துக்கள் குறைவுபட, சாணியை எருவுக்கு அதிகமாய் உபயோகிக்க மார்க்கமில்லாமல் போகிறது. (c) நிலம் புல் பூண்டற்றுப் பாழாயிருப்பதால் கனமழை யடிக்கும்போது மழைத் தண்ணீர் நிலத்தின் மேற்பரப்பிலுள்ள குருமண்ணை அடித்துக்கொண்டுபோய் விடுதல்.

இந்த முறையினால் நேரிடும் இரண்டாவது பெருங்கேடு என்னவெனில் மேன்மையான கன்றுகளை ஈனும் படியான விதமாய் அதற்கேற்ற கால்நடைகளை யுண்டாக்கி ஜாக்கிரதையாய் வர்க்கவிர்த்தி நடத்தக் கூடாமற்போவது தான். கிராமங்களிலுள்ள மேய்க்கால் நிலங்கள் எல்லா மஹா ஜனங்களுக்கும் பொதுவானவை. அவைகளில் எல்லாரும் தங்கள் கால்நடைகளை மேய்வதற்கு அனுப்பும் பாத்தியதையுண்டு. சில ஜில்லாக்களில் காளைகளை எப்போதும் விரையடிக்காமலே விட்டுவிடும் வழக்கமிருக்கிறது. வேறு சில ஜில்லாக்களில் காளைகள் முதிர்ந்த பருவமடையும் வரை அவைகளுக்கு விரையடிப்பதில்லை. இப்படி விரையடிக்காமல் விட்டு வைப்பதால் ஒன்றுக்கு முதவாத மாடுகளும் இளம்பருவமுள்ள காளைகளும் பசுக்களைப் பொலிய நேரிடுகிறது. அதனால் கிராமத்திலுள்ள கால்நடைகளின் தாம் வர வரக்குறைந்து க்ஷீணமடைய ஏது வுண்டாகிறது.

இம்முறையிலிருக்கும் மூன்றாவது பெருங்கேடென்னவென்றால் ஒரு கிராமத்தில் தொத்துவியாதிகள் சம்பவிக்கும்போது அவைகள் மிக எளிதில் பரவக்கூடிய அபாயஹேது உண்டாகிறது. மேலும் ஒரு கிராமத்தில் தொத்துவியாதிகள் ஒருதரம் உண்டாகிவிட்டால் அதைப் பரவாமல் தடுப்பது அதிகப் பிரயாசமாய் விடுகிறது. ஒருவர் மற்றொருஊரிலிருந்து ஒருபசுவைக் கொண்டு வருகிறார். அந்தப் பசுவுக்கு முன்னமே வெக்கை யல்லதுவேறு விதமான தொத்துவியாதி தாக்கியிருக்கிறது. என்றாலும் அவ்வியாதியின் குணங்குறிகள் வெளியே தெரியாமலிருக்கின்றன. இந்தப் பசுவைப்பொதுவான மேய்க்கால் நிலங்களுக்கு ஓட்டுவதினால் அந்தக் கிராமத்திலுள்ள அநேக கால் நடைகளுக்கு அவ்வியாதி உண்டாகவும், அந்தக் கிராமத்தில்

அவ்வியாதி கொஞ்சமும் இல்லாமற் செய்வதற்குள்ளாகக் கிராமத்தாருக்கு கன நஷ்டத்தை யுண்டாக்கிவிடலாம். இவ்விதத்தில் இம்முறையின் பிரதிகூலங்கள் அனுகூலங்களைவிட மிகவும் அதிகமாயிருக்கின்றனவென்றும் இம்முறை நல்லதல்லவென்றும் தெரிகிறது. ஆனால், அதை எப்படி நிறுத்தலாம்? கால்நடைகளின் தொகையைக் குறைத்து அவைகளின் ஸ்திதியை விர்த்திசெய்யவேண்டும். கிருஷிகரின் நிலங்கள் உழவாவதற்கு அவர்களுக்கு மாடுகள் அவசியம். இப்போது அவர்கள்வைத்திருப்பதைவிடகொஞ்சமான கால்நடைகளை வைத்துக்கொள்ளுவார்களானால், அக்கால் நடைகள் அதிகமானவேலைசெய்யவேண்டியதாயிருக்கும். அவைகள் முன்னிலும்பெரியனவாயும் அதிகக் கொழுத்தவைகளாயும் இருக்கவேண்டுமென்பது அவசியமில்லை. ஆனால் அவைகள் கட்டுள்ளனவாயும், சரியாய் அகன்ற மார்பும், நேரான பலமுள்ளகால்களும் குளம்புச்சீரும் உள்ளனவையாயுமிருக்கவேண்டும். கிராமத்திலுள்ள கால்நடைகளெல்லாவற்றையும் ஒன்றாய் மேயச்செய்து இளங்காளைகளை விரையடிக்காமலும் விட்டால் இந்த விசேஷ குணங்கள் கால்நடைகளுக்கு எற்படாது. தர்க்காலத்திலிருக்கும் கால்நடைகளின் ஸ்திதியை யோசிக்கும்போது அவைகளின் வர்க்கவிர்த்தியைப் பற்றி கொஞ்சமும் சிரத்தையெடுக்க ஒருவருக்கும் மனமுண்டாகாதவிதமாய்க் கால்நடைகள் அவ்வளவு கேவலஸ்திதியிலிருக்கின்றன. இப்படிச் சிரத்தை எடுக்காமலிருப்பது பெரிய பிசகு. கோவில்காளையொன்றை வைத்திருந்தால் அதை அதிகக்கவனத்துடன் தெரிந்தெடுக்கவேண்டும். அதின் சரீரத்தில் எதாவது குற்றங் குறை யிருக்குமானால் அப்படிப்பட்ட காளையைப் பொலி காளையாய் உபயோகிக்கக்கூடாது. அப்படிப்பட்ட பொலி காளையொன்றைத் தெரிந்தெடுத்த பிற்பாடு, அந்தக்கிராமத்திலுள்ள மற்றெல்லாக் காளைகளையும் வெளியேவிடாமல் கட்டிப்போடவேண்டும். அல்லது அவைகளுக்கு ஒருவயதாகுமுன் விரையடித்துவிடவேண்டும். காளைகளுக்கு மூன்று அல்லது நான்குவயதானபின் அவைகளுக்கு விரையடித்தால் அவைகள் அதிகப் பலமுள்ளவைகளாயிருக்குமென்று ஜனங்கள் நினைக்கிறார்கள். ஆனால் இவ்வபிப்பிராயம் சரியல்ல. காளைகளுக்குத் தற்காலத்தில் செய்யும் விதமாய் விரை கசக்குதல் சரியாய் நடத்தப்படுவதில்லை. இப்படி கசக்குவதைவிட விரையை வெட்டியெடுத்து விடுவது மிகவும் நலமாயிருக்கும்.

கிருஷிகர் கொஞ்சக் கால்நடைகளை வைத்துக்கொள்ள வேண்டுமானால் “அவர்கள் வைத்திருக்கும் பசுக்கள்எல்லாம் வாஸ்தவத்தில் உபயோகமுள்ளவைகள்தானா வென்றும் தற்காலத்தில் மற்ற ஜில்லாக்களிலிருந்து அதிகவிலைக்கு வாங்கிக்கொண்டு வரும் மாடுகளைப்போல அவ்வளவு சரியாய் உழவு செய்யவும் கவலையடிக்கவும் கூடியதான உபயோகமுள்ள மாடுகளை யுற்பத்தி செய்யக் கூடியவைகள்தானா வென்றும் கவனிக்கவேண்டியது அவசியம். இப்படிப்பட்ட பசுக்கள் அதிகமாய்க் கொழுப்படைய விடக்கூடாது. அவைகள் கூடுமானால் ஒவ்வொருநாளும் கொஞ்சம் நடமாடி வரவேண்டும்.

முடிவில், தென்னிந்தியாவிலுள்ள மிகச் சிறந்த கால்நடைகள் ஒங்கோலிலிருந்தே வருகின்றனவென்பதை எல்லாரும் ஒப்புக்கொள்ளுவார்கள். என்றாலும் இந்த ஜில்லாவிலுள்ள கிராமப்பொதுவான மேய்க்கால் நிலங்கள் விஸ்தீரணத்திலாவது புல் விசேஷத்திலாவது மற்ற ஜில்லாவிலுள்ளவைகளைவிட மேன்மையானவைகளல்ல. ஆனால், அங்குள்ள ஒவ்வொரு குடியானவனும் தன் கால்நடைகளைக் கட்டிவைக்கவும், அல்லது தன் சொந்த நிலங்களில் மேய்க்கவும் எற்பாடுசெய்வது வழக்கம். மேலும் அவைகளுக்

குத் தேவையான புல்லை அறுத்துக்கொண்டு வந்து போடுவதும் வழக்கம். பொலி காளைகளை அதிகக் கவனத்துடன் தெரிந்தெடுக்கிறார்கள். மேலும் பசுக்களை மந்தை மந்தையாய்க் கேவலமான காளைகளுடன் கலந்து வெளியேபோக விடமாட்டார்கள். கன்றுகள் சின்னதாயிருக்கும்போது முதற்கொண்டு அவைகளுக்கு நல்ல தீனிகொடுப்பார்கள்.

இந்த வழக்கங்களை இந்நாட்டிலுள்ள மற்றவிடங்களிலும் அனுஷ்டிப்பார்களானல், சீக்கிரமாகக் கால்நடைகளில் அபிவிர்த்தியுண்டாகுமென்பதில் கொஞ்சமும் சந்தேகமில்லை.

மென்னை அடைப்பான்

HEMORRIC SEPTICAEMIA

இந்த வியாதியை எல்லா இடங்களிலும் மென்னை அடைப்பான் என்று சொல்லுகிறார்கள். சிலவிடங்களில் தொண்டை அடைப்பான் என்றும் குதமுட்டியென்றும் ரக்த மூத்திரம் என்றும் சொல்லுவதுமுண்டு. இந்த நோய் உண்டானவுடன் கிருஷிகருக்கு இதன் இயல்பு தெளிவாய்த் தெரிவதில்லை. சிலசமயங்களில் இதை அடைப்பான் என்னும் வியாதியாகவும் சப்பை நோயாகவும் எண்ணி அவ்வியாதிகளுக்கு வேண்டிய சிகிச்சை செய்ய ஆரம்பிக்கிறார்கள். ஏனென்றால் மென்னை அடைப்பான் என்னும் வியாதியில் உண்டாகும் குணங்குறிகள் ஒருவிதத்தில் மற்ற இரண்டு வியாதிகளின்குணங்குறிகளைப்போலஇருக்கின்றன. எப்படியென்றால்முதல்முதல் இவ்வியாதியில் காய்ச்சல் உண்டாகி வெகு சீக்கிரத்தில் கொரோமான காய்ச்சலாகும்; தொண்டையில் வீக்கமுண்டாகி நன்றாய்த் தெரியும். நாக்கு வீங்கியிருக்கும். வாயிலிருந்து நீர்வடியும். வருத்தத்துடன் மூச்சுவிடும். ஆகாரத்தை விழுங்குவதில் அதிக வருத்தமிருப்பதாகத் தெரியும். கண்களையும் மூக்குத்துவாரங்களையுங் கவனித்தால் அவைகள் சற்று ஊதா நிறமுள்ளனவாயிருக்கும். இந்தக்குறி பஹிரங்கமாய்த்தெரிந்தவுடன் தொண்டையிலுண்டாயிருந்த வீக்கம் திடீரென்று அதிகமாகி, அதனால் மூச்சுவிடுவது அதிகப்பிரயாசமாவதுமன்றி, ஆகாரம் விழுங்குவதே கூடாமையாய்விடும். இவ்வியாதிகண்ட கால்நடைகள் மூச்சுவிடுவதில் படும் அவஸ்தை அதிக தூரத்திலிருப்பவர்களுக்குக்கூட நன்றாய்க் கேட்கும்.

இப்படிப்பட்ட குறிகள் வெளியே தெரிந்தவுடன் வியாதி முற்றியதாய்க் காட்டக்கூடிய வேறுசில குணங்குறிகள் தோன்றும். அவை யென்னவெனில் உமிழ் நீர் மஞ்சள் வர்ணமாய் வாயிலிருந்து வடியும். தொண்டையில் மட்டும் உண்டாயிருந்த வீக்கம் கிழிறங்கி மார்புவரையிலும் பரவிக்கொள்ளும். இப்படி வீக்கம் அதிகமாய்ப் பரவினவுடன் அந்தப் பிராணிக்கு மூச்சுவிடுவதே கூடாமல் போவதால் மரணம் சம்பவிக்கும்.

இப்படி நேரிடுவது பொதுவாய் எல்லா இடங்களிலுங் காணலாம் ஆனல் சிலகால்நடைகளுக்கு இவ்வியாதியுண்டாகும்போது தொண்டையில் வீக்கமுண்டாகாமல், முகம், வயிறு கால் முதலான மற்றவிடங்களில் வீக்கம் உண்டாயிருக்கக்காணலாம். இதைத்தவிர வேறு ஒரு முக்கியமான குறி சில கால்நடைகளில் தோன்றும். அதாவது மூத்திரம் இரத்தம்போல் சிவந்திருக்கும். இதனாலேயே இவ்வியாதிக்குச் சிலவிடங்களில் இரத்த மூத்திரம் என்னும் பேர் வழங்குகிறது. சிலகால் நடைகளில் இரத்தங் கலந்த பேதியுண்டானாலும் உண்டாகும்.

இவ்வியாதியுண்டான கால் நடைகளில் கிருஷிகர் முக்கியமாய்க் கவ

ணிக்கவேண்டியது என்னவென்றால் தொண்டையிலும், மற்ற விடங்களிலும் உண்டாகும் வீக்கம் மிருதுவாயில்லாமல் கடினமாயிருக்கும். அந்த வீக்கத்தில் அதிகச் சூடுண்டாயிருப்பதாய்த்தெரியும். கையினால் அழுத்தினால் அந்தப் பிராணிக்கு அதிக நோவுண்டாகும். மேலும் சடசடவென்று சப்தமுண்டாகாது. இதனாலே இது சப்பை நோயல்லவென்று கண்டு கொள்ளலாம். சப்பை நோயிலுள்ள வீக்கங்களை அழுத்தினால் காற்றடைத்த பையை யழுத்தினலெப்படியோ அப்படி சடசடவென்று ஒருவித சப்தமுண்டாகும் மென்னை அடைப்பானிலுள்ள வீக்கங்களில் அப்படிப்பட்ட சப்தமுண்டாகாது. அதனால் அது சப்பை நோயல்லவென்றும் மென்னை அடைப்பான் என்றும் தெரிந்துகொள்ளலாம். அடைப்பான் வியாதியுண்டான கால் நடைகளில் அமைதியில்லாமல நிற்பதும், கண்கள் திறுதிறுவென்றுபார்ப்பதும், கண்கள் சிவந்திருப்பதும், சதையில் இழுப்பும் வலிப்பு மிருப்பதும் நன்றாய்த் தெரியுங் குறிகள். இவைகள் மென்னை அடைப்பான் வியாதி சம்பவிக்கும் போது சாதாரணமாய் உண்டாவதில்லை. இவ்விஷங்களை நன்றாய்க் கூர்ந்து கவனிக்காவிட்டால் வியாதியானது அடைப்பானே, மென்னை அடைப்பானே, சப்பை நோயோ வென்று சந்தேகம் உண்டாகிவிடும். ஆகையால் கிருஷிகர் இக்குறிகளை ஜாக்கிரதையாய்க் கவனிக்க வேண்டும்,

மென்னை அடைப்பான் என்னும் வியாதியானது பிராணிகளின் இரத்தத்தில் ஒரு விஷவஸ்து தோன்றுவதால் உண்டாகிறது. இது ஒரு பிராணபாயமான தொத்துவியாதி. எருமைமாடுகளுக்கு இவ்வியாதி அதிகமாய் உண்டாகிறது. மற்றமாடுகளுக்கும் சில சமயத்தில் குதிரைகளுக்கும் கழுதைகளுக்குங்கூட இவ்வியாதி சம்பவிப்பதாகத் தெரியவருகிறது. இவ்வியாதி மழைகாலத்திலே தான் உண்டாவதாகத் தெரியவருகிறது. அடைமழை பெய்ததற்குச் சில காலத்துக்குப் பின்னும் உண்டாகிறது. அடிக்கடி வெள்ளத் தண்ணீர்கட்டக்கூடிய சதுப்பு நிலங்களுள்ள இடங்களில் இவ்வியாதியுண்டாகிறது. இளமைப் பருவமுள்ள கால்நடைகள் இவ்வியாதியால் அதிகமாய்ப் பீடிக்கப்படுகின்றன. (இன்னும் வரும்)

பருத்திச் செடியின் பல பாகங்கள்

PARTS OF A COTTON PLANT

1. பள்ளிக்கலை பயில்பாலரே பருத்திச்செடி பாரும்
துள்ளித்திரிந் தாடாதிவண் சொல்லும்வகை கேளும்
கிள்ளிமிகச் சில்லேருடன் கிளறிக்கொடு வாரும்
உள்ளத்தினில் என்வார்த்தையை யூன்றியுடன் பதியும்.

2. நெருங்கத்தளிர் இலைகள்மிக நேர்நீண்டிடு கிளைகள்
அரும்பித்தரு பூக்காய்பெற ஆகும்பஞ்சுச் சுளைகள்
ஒருங்கேயிவற் றினைத்தாங்கிடும் ஒன்றாகிய தூறும்
மருங்கேநின்று கீழ்நோக்கியே மண்ணில்செலும் வேர்கள்.

3. பார்க்கவ்வெகு அழகாகவே காணப்படும் பாரில்
யார்க்கும்மனோ ஹரமாகவே இருக்கும்செயல் தானும்
தீர்க்கம்மிகு கருணையுடன் சிருஷ்டித்தவை செழிக்கும்
மார்க்கந்தரு கடவுள்தனை வணங்கித் தொழுதிடுவீர்.

4. செல்லா ! இப் பருத்திச்செடி சிந்நாளின்முன் சிறிதாய்
பல்லோர்களுங் காண்பதெந்தப் படிசீக்கிரம் வளர்தல் !
எல்லோருமிவ் வுலகத்தினில் வளரும்விதம் எதுவோ ?
சொல்லாயிவை களின்காரணம் சூட்சியுடன் அறிந்தே.

5. ஐயஅனு தினமும்உண வருந்திவளர் கின்றோம்
செய்யும்பயி ரெந்நாட்டிலுஞ் செழிக்கும் மணினுணவால்
வெய்யகனல் நீரேற்றிட வேகும் நமதுணவு
பெய்யும்மழை வெயில்காற்றினில் பெருகும்பயி ருணவே.

6. வாயின்வழி யுண்போமது வயிற்றில்செமித் திடுமே
தாயின்தனிப் பாலால்தினம் தழைப்பார்சிறு பாலர்
சேயின்தர மதில்சேர்ந்திடு செடிவேர் வழியாயே
பாயுஞ்சலங் கரைத்தேயதிற் பருகும்பயி ருணவை.

7. நாணு ! நம் மூக்கின்வழி நாம்மூச்சினை விடுவோம்
பேணும்பயி ரெந்நாளினும் பெருமூச்சுகள் விடுமோ ?
காணுமிவ் விலைமேலுள கணக்கற்றிடு துளைகள்
மாணும்பயிர் களுக்காக்கிய வனப்பார்பல மூக்கே.

8. பூவிற்பொலி யாண்பெண்மலர் பொருந்தும் விதம்பாரும்
தாவும்மிவ ணார்பூச்சிகள் தள்ளும்மக ரந்தம்
காவில் அரும் பிஞ்சாகியே காயாகிப்பின் கனியாம்
மாவற்புத மாகப்பர மாத்மாசெயு மாண்பே.

9. வேரின்பல பிரிவின்முனை வெகுநுண்ணிய தான
பாரின்பயி ருணவுண்டிடு பல்கோடிமெல் வாய்கள்
நேரின்அத னுள்ளேபுக நிரம்பப்பொடி யாகி
நீரின்மணும் கரையும்விதம் நெகிழ்வைப்பெற வேண்டும்.

10. இதமாகவே வயற்காடுகள் ஈரம்உல ருமுன்
பதமாய்உழ நம்மூரினர் பரிந்தேகுவ திதனால்
நிதமும்உழப் பொடிமண்மிக நெகிழ்வாய்ப்பின் கரையும்
விதமாய்ச்சமைந் தாறியுடன் மிகப்பக்குவ மாமே.

11. இதுவேநம துழவின்பயன் யாவர்களும் அறிவீர்
பொதுவாய்நிலங் கிளரும்வகை போதாதுமெய் யுணர்வீர்
புதிதாகுமிவ் விரும்பால்செயும் பொடியில் உழுங் கலப்பை
அதுவேமிக மண்ணைப்புரட் டிடுமாழமு மாக்கும்

12. செடிகள்வளர் வடையத்தகு செயலாயுறு பொருள்கள்
பொடியாகிய மண்ணும்அது போலும்பயி ருணவும்
கொடிதாகிய வெயிலும்உடன் கூடும்ஒழி காற்றும்
மிடிதீர்த்திடு தண்ணீரிவை மிகக்கொள்வித முழவும்.

J. DHARMARANGA RAJU.

குறிப்புகள்

NEWS AND NOTES

இந்தியாவிலிருந்து—பிலிப்பைன் தீவிற்கு வாங்கிக் கொண்டுபோய் அவ்விடத்திலுள்ள மாடுகளுடன் வர்க்கவிர்த்தி யுண்டுபெண்ணின சில அமிர்த மஹால் மாடுகளின் வர்க்கங்கள் ரோட்டுகளில் நன்ருய் ஓடுவதாகவும், நெல் லூர்மாடுகளின் வர்க்கங்கள் பலவித வேலைகளுக்கும் உபயோகப்படுவதா கவும் தெரிகிறது. மேலும் அவ்விடத்திலுள்ள மாடுகளெல்லாம் தீவனக் குறைவு எற்பட்டால் அதிகமாய் மெலிந்து எலும்பெலும்பாய் போவதாயும் வேலைசெய்ய உபயோகப்படுவதில்லை யென்றும் இந்திய வர்க்கமாடுகள் கால் வயறு தீவனம் கொடுத்தாலும் அவைகளின் திரேகக்கட்டு குறையாமலிருப் பதோடு பட்டினி கிடக்கும்போதும் நன்ருய் வேலைசெய்வதாகக்கேட்டுச் சந்தோஷிக்கிரும்.

***

நமது இராஜதானியின் பல ஜில்லாக்களில் மழைக்குறைவிஞல் மாடு களுக்குத் தீவனம் அகப்படுவது கஷ்டமாயிருக்கிறதென்றும், இப்போதே வைக்கோல் முதலிய மாட்டுத் தீவனங்கள் அகவிலையாய் விற்கின்றன வென்றும் சில விடங்களில் மாடுகளுக்குக் குடிப்பதற்குக்கூட தண்ணீர் அகப்பட வில்லையென்றும் கேட்டு அதிக விசனிக்கிரும்.

***

நமது சந்தாதாரர்களில் சிலர் சென்னையில் விற்கும் சரக்குகளின் விலைகளைக் குறித்து ஒவ்வொரு மாதத்து சஞ்சிகையிலும் பிரசுரித்துவர வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிருர்கள். அப்படி நாம் பிரசுரிப்பதால் நமது சந்தாதாரர்களில் எத்தனைபேருக்கு அனுகூலமுண்டாகு மென்று தெரியவில்லை. அனுகூலமடையப்பட்டவர்களுக் கெல்லாம் நமக்குத் தெரி வித்தால் அவர்களின் தொகையைப் பார்த்து அப்படியே செய்வோம்.

***

அடுத்த மே மாதத்தில் செங்கற்பட்டு ஜில்லா திருவள்ளூரில் கல்வி இலாகா உத்தியோகஸ்தர்களெல்லாம் ஒன்று சேர்ந்து கல்வி கற்பிக்கும் நூதன முறைகளைப்பற்றிப் பேசுவதுடன் கல்விசம்பந்தமான ஒரு பொருட் காட்சியும் வைப்பார்களென அறிகிருேம்.

***

குலசேகரபட்டணம் ம-ா-ா-ஸ்ரீ, வி. குமாரவேலு பிள்ளை அவர்கள் எழுதிய கடிதத்திற்கும் பாளையங்கோட்டை ம-ா-ா-ஸ்ரீ, R. S. வடிவழகி நம்பியாப்பிள்ளை அவர்கள் எழுதிய கடிதத்திற்கும் அடுத்த சஞ்சிகையில் ஜவாபு எழுதப்படும்.

இனிய தமிழ் நாவல்கள்

	ரூ.	அ.
ஜடாவல்லவர் முதற்பாகம் ...	0	8
ஷை இரண்டாம்பாகம் ...	0	10
(இரண்டுபாகமும் சேர்ந்து)	1	0
* விஜயலெட்சுமி ...	0	10
* சீதாராம் ...	1	0
* வசீகரி (From East Lynne)	1	0
சுசீலா ...	1	0
* மங்களாம்பாள் ...	0	8
ஞானம்பாள் ...	0	6
* சுப்பிரமணிய தோத்திரக் கொத்து உருவப்படத்துடன்	0	3
ராஜாம்பாள் } துப்பறியும்	0	12
* சந்திரகாந்தா } நாவல்கள்	0	12
* பவானந்தர் ...	0	8
சந்திரசேகரன் ...	0	8
ஆனந்தமடம் ...	0	8
போஜசரித்திரம் ...	1	8
புருஷோத்தமன் ...	0	10
மங்கைக்கரசி ...	0	12
சுந்தரன் ...	0	12
லீலா (From Reynolds) ...	0	12
சாரதாம்பாள் ...	0	8
வத்ஸலா ...	0	8
வசந்தசேனை ...	0	4
காணமற்போன கண்மணி ...	0	3
பிரேமகலாவதீயம் ...	0	12
கமலனீகலஹம்சம் ...	0	8
குணசீலன் ...	0	10
வாசந்திகா ...	0	8
காமாக்ஷி ...	0	8
பங்கஜாக்ஷி ...	0	8
அழகம்மாள் ...	0	12
ரத்தின விமானம் ...	0	12
தாருகா காசவம் ...	0	14
பிரதாபமுதலியார் சரித்திரம்	1	0
சுந்தரிமனோகரன் ...	0	12
விவேகாநந்த ஸ்வாமி உபந்நியாசம் கர்மயோகம் ...	0	8
ஷை ஞானயோகம் ...	0	8
பகவத்கீதை (3 பக்ஷியம்) ...	1	0
ஷைபாராயணத்திற்கு ...	0	8

* புதிய புஸ்தகங்கள்.

	ரூ.	அ.
* சிவராத்திரி புராணம் ...	1	4
* சுகதேவி ...	0	8
* விவேகாநந்த விஜயம் ...	1	4
* சபலை ...	0	8
அரிச்சந்திரன் ...	0	4
திருலோக மோகனாங்கி ...	1	4
* லெக்ஷ்மி ...	0	8
* ஆனந்தசுந்தரி ...	0	12
மாலிகாபூஷணி ...	0	10
கனகவல்லி ...	1	0
தமயந்தி ...	0	9
அநுமான்சிங் ...	0	12
பழமொழி ...	0	2
லலிதா ...	0	10
மகாராணி சரித்திரம் ...	1	0

மகா-ள-ள-ஸ்ரீ, ப. சம்பந்த முதலியார் B.A.B.L. இயற்றிய

	ரூ.	அ.
அமலாதித்யன் ...	1	0
லீலாவதி சுலோசனை ...	0	12
மனோகரன் ...	0	12
இரண்டு நண்பர்கள் ...	0	12
சத்ருஜித் ...	0	12
* காதலர் கண்கள் ...	0	12
கள்வர் தலைவன் ...	0	8
யயாதி ...	0	8
சாரங்கதரன் ...	0	8
வேதாள உலகம் ...	0	8
காலவரிஷி ...	0	8
* ரத்னாவளி ...	0	12
* பேயல்ல பெண்மணியே ...	0	8

பண்டித நடேச சாஸ்திரியார் இயற்றிய

	ரூ.	அ.
தீனதயாளு ...	0	8
மதிகெட்ட மனைவி ...	1	0
மாமி கொலுவிருக்கை ...	0	8
தலையணை மந்திரோபதேசம்	0	8
கோமளம் குமரியானது ...	0	12
திக்கற்ற இருகுழந்தைகள் ...	1	4
முத்திரா ராக்ஷஸம் ...	0	4
மிருச்சகடி ...	0	4
வேணிசம்ஹாரம் ...	0	3

எஸ். ஜி. ஐயர் அண்டு கம்பெனி,
திருவல்லிக்கேணி.

ஆனந்த ராமாயணம்

இதுவும் வான்மீகி மகாரிஷியால் வடமொழியில் எழுதப்பட்டது. இதைத் தமிழில் மொழிபெயர்த்துப் பன்னிரண்டு சஞ்சிகைகளாக வெளியிடுகிறோம். இதில் வான்மீகி ராமாயணத்தில் இல்லாத அனேக விஷயங்கள் அடங்கியுள்ளன. ஸ்ரீராம லக்ஷ்மணருடைய ஜனனமும் வளர்ப்பும், சீதா தேவியினுடைய ஜனனமும், அத்தேவிக்குப் பலபெயர் வந்ததற்குக் காரணமும் விளக்கி யிருப்பது படிப்பதற்கு வெகு இனிமையா யிருக்கும். ஆனந்த ராமாயண மென்ற இதன் பெயருக்கொத்தபடிப் படிப்போர் மனதிற்கு உற்சாகமும் ஆனந்தமும் உண்டாக்கு மென்பதில் தடையில்லை. இதுவரையில் தமிழ்ப்பாஷையில் வெளிவராதது. ஆகையால் நமது அபிமானிகள் ஒவ்வொருவரும் வாங்கி வாசித்துப் பயன்படும்படிக் கேட்டுக்கொள்ளுகிறோம். இப்புஸ்தகம் ஒன்பது காண்டங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றது.

காண்டங்களின் விவரம்.—1. ஸாரகாண்டம் 2. யாத்ராகாண்டம், 3 யாககாண்டம் 4. விலாஸ காண்டம், 5. ஜன்ம காண்டம், 6. விவாக காண்டம், 7. ராஜ்ய காண்டம், முதல்பாகம், இரண்டாம்பாகம், 8. மனோகர காண்டம், 9. பூரணகாண்டம். ஒவ்வொரு சஞ்சிகையிலும் சித்திரப்படமொன்று அமைத்து வெளியிடப்படும். சந்தா விவரம்:—

பத்து பாரம் கொண்ட சஞ்சிகை ஒன்றுக்குச் சந்தா	0	6	0
மூன்று மாதத்துக்கு	1	0	0

இப்புத்தகம் பன்னிரண்டு சஞ்சிகையில் முடிவாகும். தபாற் கூலி வேறு. 4-வது சஞ்சிகைகள் வெளியாய்விட்டன.

வேண்டுவோர் கீழ்கண்ட விலாசதாருக்கு எழுதி ரிஜிஸ்தர் செய்து கொள்ளவும்.

ஸ்ரீமத் பாகவதம்

ஸ்ரீமத் பாகவதமானது சதுர்வித புருஷார்த்தங்களுள் பிரதானமான மோக்ஷ சாம்ராஜ்யப்பேறு பெறுவதற்கு இன்றியமையாத சாதனமாகிய பகவத்பக்தி புகட்டத்தக்க அரிய நூலென்பது யாவரும் அறிந்த விஷயம். இத்தகைய கிரந்தம், தமிழ், சமஸ்கிருதாபிமானிகளாகிய நம்மவர் ஒவ்வொருவர் கிருகத்திலுமிருப்பது அவசியமென்பதை யுத்தேசித்து ஸ்ரீதரீய வியாக்கியானத்துடன் மூல சுலோகமும், அந்த மூலத்துக்கேற்பத் தமிழ் மொழிபெயர்ப்பும் அச்சிட்டு, சஞ்சிகைரூபமாக வெளிப்படுத்த முதலில் தசமஸ்கந்தத்தை ஆரம்பித்தோம். இப்பொழுது 7-சஞ்சிகைகள் வெளியாயிருக்கின்றன. ஒரு சஞ்சிகை ராயல் 10-பாரங்கொண்டது (80-பக்கம்). ஒவ்வொரு சஞ்சிகையிலும் சித்திரப்படமொன்று அமைக்கப்பட்டிருக்கும்.

சந்தா விவரம்

மாதம் 1-க்கு 0-7-0. மூன்று மாதத்திற்கு 1-4-0. தபாற் கூலி வேறு.

எ. வி. ஐயர் அண்டு கம்பெனி,
79, பெரியதெரு திருவல்லிக்கேணி,
சென்னை.

A. V AIYER & Co.,
Book Sellers & Publishers,
Triplicane, Madras.

குறிப்பு:—இதைப்பற்றி ஆர்டர் செய்கிறவர்கள் இப்பத்திரிகையை குறிப்பிடவும்.

நோட்டீஸ்

ஒவ்வொரு தமிழ் மாதம் முதல் தேதியிலும் தவறாமல் நமது பத்திரிகை யனுப்பப்படுகிறபடியால், "கிருஷிகன்" சந்தாதார்களில் எவராவது தமிழ் மாதம் ஐந்தாம் தேதிக்குள் பத்திரிகை பெருவிட்டால், பத்திரிகை பிரசுரமாகிவிட்டதோ இல்லையோ என்னும் சந்தேகமடையாமல் உடனே கிருஷிகன் மானேஜருக்குப் பத்திரிகை சேராத விஷயம் தெரிவித்தால் அந்தந்தத் தபாலதிகாரிகளுக்கு எழுதி விசாரிக்கும்படி செய்வதுடன் வேறு பத்திரிகையுமனுப்பப்படும்.

சந்தாதாரர்கள் நமக்குக் கடிதம் எழுதும்போதெல்லாம் தயவுசெய்து விலாசத்தின்மேல் எழுதியிருக்கும் நம்பரைக் குறிப்பிட்டு எழுதவேண்டும். அச்சடித்திருக்கும் Register No. M. 801 என்பதை எழுதிவிடக்கூடாது என்பதைக் கவனிக்கக் கோருகிறோம்.

"கிருஷிகன்" சித்திரை, ஆடி, ஐப்பசி மாதங்களின் சஞ்சிகைகள் செலவாகிவிட்டதால் இனிமேல் இவ்வருஷத்தில் சேரும் சந்தாதாரர்களுக்கு இம்மூன்றுபிரதிகளும்கொடுக்கமுடியாது. எழுதிய கடிதங்களுக்குப் பதில் கிடைக்க வேண்டுமானல் ரிப்ளை கார்டாவது ஸ்டாம்புகளாவது அனுப்பவேண்டும்.

மானேஜர்.

கிருஷிகன்

மாதந்தோறும் பிரசுரமாகும் ஓர் விவசாயப்பத்திரிகை. ஷை பத்திரிகையானது விவசாயத்தில் அனுபோகமும் பாண்டித்யமுமுள்ளவர்களால் எழுதப்பட்டு வருகிறது. ஒவ்வொருவரும் வாங்கி வாசித்து நமது தேசத்து விவசாயம் விருத்தியடையவேண்டும் என்னும் எண்ணத்துடன் காகிதக்கிரயமும் அச்சுக்கூலியும் தபால் செலவும் மாத்திரம் கிடைக்கும்படிக்கான குறைந்த சந்தா வைக்கப்பட்டிருக்கிறது. ஒரு வருஷத்திற்குக் குறைந்த சந்தா அங்கீகரிக்கப்படமாட்டாது. ஒவ்வொரு வருஷமும் சித்திரைமீ முதல் ஆரம்பமாகிறது. கடந்த சஞ்சிகைகளைக் கூடுமானவரையில் சப்ளை செய்யப்படும்.

சந்தா விபரம்		ரூ.	அ.	பை.
இந்தியா, பர்மா, சிலோனுக்கு மாத்திரம் தபாற்கூலி உள்பட வருஷம் ஒன்றுக்கு	... ...	0	12	0
வி. பி. கமிஷன் அணு 1-பிரத்தியேகம்.				
தனிப்பிரதி	... ...	0	2	0

மற்ற அயல்தேசங்களுக்குத் தபால்கூலி மாத்திரம் பிரத்தியேகம்.

வேண்டியவர்கள்

ரங்க ராஜு அண்டு பிரதர்ஸ்,
5, மௌண்ட்ரோட், சென்னை

என்று எழுதி வி. பி. மூலமாய்ப் பெற்றுக்கொள்ளலாம்.

உயர்ந்த நான்கு தங்கப்பதக்கங்களும் முதல்தரமான
அனேக யோக்கிதா பத்திரங்களும் வெகுமான மளிக்கப்பட்டன

ஆயுர்வேத மார்த்தாண்ட, பிஷங்மணி
பண்டித டி. கோபாலாசாரியார் எ. வி. எஸ்.

பிரின்ஸிபால் எஸ். கே. பி. டி. ஆயுர்வேதிக் காலேஜ், அவர்களால்
சாஸ்திரமுறைப்படி நேரில் செய்யப்பட்ட ஆயுர்வேத ஔஷதங்கள்

கற்பூராத்யரிஷ்டமும், விஷமுஷ்டிஸஞ்ஜீவினி மாத்திரைகளும் } விலை அணு 12.

இவை காலரா என்றவியாதியைத் தடையின்றி நிர்மூலமாக்கும். தக்ஷணத்தில் வாந்திபேதியைநிறுத்திவிடும். ஜன்னியைக்கொஞ்சமும் தலையெடுக்கவொட்டாது. மூத்திரத்தை வரச்செய்யும். வியாதி எந்த ஸ்திதியிலிருந்தாலும் கண்டிக்கும்.

(2) அசோகவடி:— புட்டி 1-க்கு விலை அணு 12. ஸ்திரீகளுக்குப் பகிஷ்டையாகும் சமயத்தில் ரஜஸ் வெள்ளமாய்ப்போதலையும், வயிற்றுவலி, காலெரிவு, யோனிப்புற்று கருப்பையிலிருந்து சீ யொழுகல் முதலியவற்றையும், கண்டிக்கக்கூடிய அமிருத சஞ்ஜீவினி.

(3) கேஸப்பிரஸாதன தைலம்:— புட்டி 1-க்கு ரூ 1—0—0. ஒவ்வொருவருடைய வீட்டிலிருக்கத்தகுந்த பரிமள கூந்தற்தைலம். கூந்தலை நன்றாய் வளரச்செய்யும். கண்களின் எரிச்சலைத்தணிக்கும்.

(4) வஜ்ரதந்த சூர்ணம்:— டின் 1-க்கு அணு 4. இந்தச் சூர்ணத்தினாலே பற்களைத் தேய்த்தால் வாய் நாற்றம், புண்கள், பற்கள் அசைதல், ஈறுகள் தடித்தல், பற்களில் ரத்தமும், சீயும் ஒழுகிக்கொண்டிருத்தல் முதலியவைகளைப் போக்கடித்து, தந்தமாம்சங்களுக்கு மிகுந்த பலத்தை உண்டுபண்ணி வாய்க்கு நல்ல வாசனைகொடுக்கும்.

(5) சுகவிரேசனவடி:— புட்டி 1-க்கு அணு 8. இந்த மருந்தைக் கொஞ்சகாலம் வரைக்கும் உபயோகித்துவந்தால் மலக்கட்டு, அக்கினி மாந்தம், அதிகபித்தம், வயிற்றில் எரிச்சல், வயிற்றுவலி, தலைசுழற்றல், மூலவியாதி அபான வாயுவு தோஷங்கள், காமாலை முதலியவைகளைப் போக்கடிக்கும்.

ஆயுர்வேத மார்த்தாண்ட, பிஷங்மணி
பண்டித டி. கோபாலாசாரியார் எ. வி. எஸ்.
ஆயுர்வேதாச்சிரமம்,
55, ஆசாரப்பன் தெரு,
ஜார்ஜ்டவுன், சென்னை.

டெலிகிராம் அட்ரஸ் "பண்டிட்" மதிராஸ்.

P. SUBBA ROY'S

Wonderful Auyurvedic Medicines.

பி. சுப்பராய், பரங்கிப்பேட்டை,

தென்னாற்காடு ஜில்லா.

தயவுசெய்து தங்கள் சினேகிதர்களுக்கு வாசிக்கக் காண்பியுங்கள்

பி. சுப்பராயின் அபூர்வ ஆயுர்வேத ஔஷதங்கள்.

12. "உரோமசம்ஹாரி."—இந்தச் சூரணத்தை மயிருள்ளவிடத்தில் தடவினால் வெகு எளிதில் மயிர் நீங்கிவிடும். சீசா 1-க்கு அணா 4. 1-முதல் 6-சீசாக்கள் வரையில் வி. பி. செலவு அணா 5, பிரத்தியேகம்.

13. "சுகந்த பல் பொடி."— நல்ல ஜீரண சக்தியைத் தரும். பல் வலி எக்காலத்திலும் வராது. பல் எக்காலத்திலும் விழாது. சீசா 1-க்கு விலை அணா 3. வி. பி. செலவு 1 முதல் 5 சீசாக்கள் வரையில் அணா 5, பிரத்தியேகம்.

14. "ஸ்கலித ரக்ஷணி."—பலஹீனத்தாலும், உஷ்ணத்தினாலும் சிற்றின்பத்தில் பாலியத்தில் நுழைந்து மூழ்கியிருந்த காரணத்தாலும், தூக்கத்திலும், சொப்பனத்திலும், இந்திரியம் தானாக வெளிப்படுவதை நிற்பாட்டி தேக திடத்தைத்தரும். சீசா 1-க்கு அணா 8, வி. பி. செலவு 1-முதல் 6-சீசாக்கள் வரையிலும் அணா 5, பிரத்தியேகம்.

15. "உயர்ந்த கஸ்தூரி."—மிகவும் நேர்த்தியானதும், முதல் தரமானதும், காஷ்மீர் தேசத்திலிருந்து நேராக வரவழைத்த கஸ்தூரி நம்மிடத்தில் எப்பொழுதும் கிடைக்கும். தோலா 1-க்கு ரூபா 84. 1 ரூபாய்க்கு குறையாமல் சில்லரையிலும் விற்கப்படும். வி. பி. செலவு பிரத்தியேகமாகும்.

16. "தேள்கொட்டின் மருந்து."—இம்மருந்தை விஷம் தீண்டிய இடத்தில் தடவினால் தக்ஷணமே விஷமிறங்கி வருத்தப்பட்டுச் சகிக்க முடியாத வேதனையில் நின்று நீங்கி யாவரும் ஆச்சரியப்படத்தக்க விதமாய் ஆனந்திக்கும்படியான அனுகூலத்தைத் தரும். கிரயம் சீசா 1-க்கு அணா 4. இந்தியாவிலும் பர்மாவிலும் 1-முதல் 12-சீசாக்கள் வரையிலும் வி. பி. செலவு அணா 5, பிரத்தியேகம்.

"முக்கிய குறிப்பு."—ஒரே தடவையில் 12 சீசாக்களுக்குக் குறையாமல் வாங்கினால் டஜன் 1-க்கு 2—8—0 வீதம் கொடுக்கப்படும். வி. பி. செலவு அணா 5 பிரத்தியேகம். இக்குறிப்பு தேள் மருந்து தவிர மற்றெந்த மருந்திற்கும் சம்பந்தப்பட மாட்டாது.

17. "மேகரண மருந்து."—இதை வெள்ளைத் துணியில் தடவி ரணங்களின்மேல் போட, அரையாப்பு, கண்டமாலை, விப்புருதி, தொடைவாழை, செவ்வாப்பு, ஆசனப்பவுத்திரம், அழுகுளியன், பிளவை, கிரந்தி, மேக வெடிப்பு, இலிங்கப்புற்று, யோனிப்புற்று முதலிய இரணங்கள் ஆறி சொஸ்தமாகும். விலை சீசா 1-க்கு அணா 8, இந்தியாவிலும் பர்மாவிலும் 1-முதல் 3-சீசாக்கள் வரை வி. பி. செலவு அணா 5, பிரத்தியேகம்.

18. "கண்டசுத்தி மாத்திரை."—டைரக்ஷனில் சொல்லியபடி இதைச்சாப்பிட்டு வந்தால் தொண்டைகட்டு, தொண்டை கம்மலை நீக்குவதன்னியில், இன்பமாய் பாடுவதற்கு இசைந்த குரலைத் தரும். சங்கீத வித்வான்களுக்கும், பிரசங்கஞ் செய்யப்பட்டவர்களுக்கும், உபாத்தியாயர்களுக்கும் இது ஓர் அருமையான ஔஷதம். எத்தனை நேரம் பாடினாலும், பிரசங்கித்தாலும் குரல் கம்மாது. இனிமையான ஓசையைத் தரும். கிரயம் சீசா 1-க்கு அணா 8, இந்தியாவிலும், பர்மாவிலும் 1-முதல் 6-சீசாக்கள் வரையில் பாக்கிங்கு தபால் முதலியசெலவு அணா 5, பிரத்தியேகம்.

19. "சுகந்த ஸ்நானப்பொடி."—இந்த வாசனைப்பொடியைத் தினந்தோறும் தேகத்தில் தேய்த்து ஸ்நானம் செய்துவந்தால் தேகத்திற்குச் சுகந்த பரிமளத்தைத் தந்து தேமல், அரிப்பு, சொறி, சிரங்கு, கற்றாழை நாற்றம், கைகால் எரிச்சல், மேக காங்கை, சரீரவரக்ஷி, கணச்சூடு, வெடிப்பு, கரப்பான், தலைவலி, பொரிமேகம் படர்தாமரை, மேக ஊரல், கிரந்தி முதலிய இன்னும் அனேகவித தோலைப்பற்றிய வியாதிகள் தீரும். நல்லவாசனையும் காந்தியும் லக்ஷ்மிகரமும் ஆரோக்கியமுமுண்டாகும். அரைக்குழந்தை முதல் யாவரும் உபயோகிக்கலாம். டப்பா 1-க்கு விலை அணா 8, வி. பி, செலவு அணா 3, பிரத்தியேகம்

20. "சஞ்சீவி மாத்திரைகள்."—இம்மாத்திரைகளினால் தலைவலி, தலைபாரம், சளி, இருமல், சுரம், மயக்கம், வாந்தி, விஷசுரம், இசிவு, வயிற்றுப்பிசம், வயிற்றுவலி, தெற்குத் திக்கணை முதலிய நோய்கள் தீரும். அரைக்குழந்தை முதல் யாவரும் உபயோகிக்கலாம். விலை சீசா 1-க்கு அணா 10. இந்தியாவிலும் பர்மாவிலும் 1-முதல் 6-சீசாக்கள் வரையில் அனுப்ப வி. பி. முதலிய செலவுகள் அணா 5 பிரத்தியேகம்.

21. "மஹா கோரோஜனை மாத்திரைகள்."—இம்மாத்திரையினால் இருமல், சளி, சுரம், வயிற்றுப்பிசம், இளைப்பு, வலி, மயக்கம், தெற்குத் திக்கணை, ஜன்னி, வயிற்றுப்போக்கு, தோஷம், மூக்குமாந்தம், ஊதுகணம், செவ்வாப்பு, கடுவான், கரப்பான், பால் மாந்தம் முதலிய எல்லா மாந்தங்களும், கருங்கிரந்தி, செங்கிரந்தி, மலஜலக்கட்டு முதலியதுகளும், மலைசுரம், முறைசுரம், முதலான பலவித சுரங்களும் அடியோடு நீங்கும். சீசா 1-க்கு விலை அணா 10. 1-முதல் 6-சீசாக்கள் வரையில் வி. பி. செலவு அணா 5, பிரத்தியேகம்.

22. "கரப்பானுக்கும் சொறி சிரங்குக்கும் மருந்து:"—இம்மருந்தை டைரக்ஷனில் சொல்லியபடி மேலுக்கு மட்டும் உபயோகித்துவந்தால் வெகு சீக்கிரத்தில் எவ்வித நமைச்சல்களும் சொறி, சிரங்கு, வரட்டுச்சொறி, அநேக குழந்தைகளுக்கு தேகமெங்கும் அல்லது சில பாகங்களில் கண்டு அதிக நமைச்சலையும் தொந்திரவையும் தருகின்ற எவ்வித கருப்பான்களையும் வெகு சீக்கிரத்தில் ஆற்றிவிடும். விலை சீசா 1-க்கு அணா 8. இந்தியாவிலும் பர்மாவிலும் அனுப்ப வி. பி. செலவு 1- அல்லது 2 சீசாக்கள் வரையில் அணா 5 பிரத்தியேகம்.

பி, சுப்பராய், பரங்கிப்பேட்டை,

தென்னாற்காடு ஜில்லா.

இரங்கோன்

இரஞ்சித போதினி

எப்பொழுதும் சித்திரப்படங்களோடு பிரகாசிப்பதுடன் அறிவைப் பரவச்செய்து ஆனந்தத்தை விளைவித்து யாவர்க்கும் சுகசெல்வ நன்மைகளையும், சுகிர்தபாக்கிய பொக்கிஷத்தையும், நீடுழி பெருகுவிக்கும் ஓர் நவீன மாதாந்தப் பத்திரிகை. இதிலடங்கிய விஷயங்களாவன:—

சுதேச சுகாதார சங்கத்தின் மெம்பர்கள் எழுதும் வியாசங்கள், மனோவசிய சாஸ்திரம், சுகாதாரவிளக்கம், அமெரிக்க சாஸ்திர ஆராய்ச்சி சங்கத்தினர் கண்டுபிடித்த நூதன விஷயங்கள், வைத்தியக்குறிப்பு, பாலர் பரிபாலனம், ஸ்திரீகளுக்குரிய விஷயங்கள், விநோத விசித்திர விஷயவிளக்கம், அதிரசமஞ்சரி, ஹிதோபதேசம், பழமொழி, விடுகதை விநுக்கள், உள்நாட்டு வெளிநாட்டு வர்த்தமானங்கள், ஜீவாதார மந்திரோபதேசம் முதலிய அரிய பெரிய பல விஷயங்கள்.

இதன் வருஷசந்தா ரூபா 2. தேவையானவர்களுக்கு மாதிரிப்பிரதி அனுப்பப்படும்.

மானிட மர்மசாஸ்திரம்

ரூபாய் 300 இனம்

விவரம் பின் குறிப்பிட்டிருக்கும் ஒவ்வொரு புஸ்தகத்திலும் கண்டுகொள்ளலாம்.

		அணா
1.	மானிட ஜீவியத்தின் பலபருவங்கள் (ஓர் உபந்நியாசம்) 23 படங்களுடன்	6
2.	இல்லற இன்ப இரகசியம் (29 படங்கள்)	12
3.	ஜனனேந்திரியங்களின் அமைப்பும் அற்புதங்களும் (46 படங்கள்)	12
4.	மாதாவின் மாக்ஷிமை (18 படங்கள்)	6
5.	சிசுவுற்பத்தி (34 படங்கள்)	6
6.	கர்ப்பக்கால சுகாதாரவிதிகள் (8 படங்கள்)	4
7.	கர்ப்பக்கால நோய்களும் பரிகாரங்களும் ...	6
8.	மருத்துவசாஸ்திரம் (8 படங்கள்)	8
9.	சிசு பரிபாலனம் (15 படங்கள்)	4
10.	ஆண், பெண், மலட்டிற்கு நிவாரணம் (5 படங்கள்) ...	8
11.	ஆண்மையின் அழிவும் அதன்மீட்சியும் வாலிபருக்கு (6 படங்கள்)	8
12.	சமயோசித சஞ்சீவி	2

தபாற் செலவு ஒரு அணா

மேற்குறித்த புஸ்தகங்களுக்கு ஒரே தடவையில் ஆர்டர் அனுப்புகிறவர்களுக்குத் தபாற்செலவு உள்பட ரூபா 5-க்கு அனுப்பப்படும்.

12. புஸ்தகங்களையும் ஒன்றாகச்சேர்த்து உயர்ந்த காலிகோ பயிண்டு செய்து தங்க எழுத்துக்கள் பதித்த பிரதி ஒன்றுக்குத் தபாற் செலவு உட்பட ரூபா 5-8-0.

மானேஜர்,
"இரஞ்சித போதினி ஆபீஸ்"
11, 12 கமிஷனர் ரோட்,
இரங்கோன்.

‘தென்னிந்திய விவசாயம்’

32 பக்கங்களுடன் மாதந்தோறும் வெளியாகிறது.

வருஷ சந்தா தபால் உள்பட ... ரூ 3 0 0

	ரூ.	அ.	ப.
விவசாய விளக்கம்	1	4	0
தென்னை	1	0	0
கரும்பு	1	0	0
நெல்	1	0	0

தபால் செலவு பிரத்தியேகம்.

ஜி. இராஜகோபால் பென்ஷன், விவசாய இன்ஸ்பெக்டர்,
தென்னிந்திய விவசாயம்,
வண்ணாரப்பேட்டை, சென்னை.

The South Indian Mills Co., Ltd.
TINNEVELLY.

தென் இந்திய மில்ஸ் கம்பெனி (லிமிடெட்)
திருநேல்வேலி.

மூலதனம் ரூ. 900000.

ரூ. 100 பெறுமான சாதாரண பங்குகளுக்கு விண்ணப்பம் இப்போது வாங்கப்படுகிறது.

விவரங்கள் திருநெல்வேலி ஆபீசுக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம். பருத்திக்கொட்டையிலிருந்து எடுக்கப்படும் சுத்தமான நெய் ஆகஸ்ட்டுமீ முதல் ஷெ கம்பெனியில் கிடைக்கும்.

THE COMPLETE LETTER WRITER

2nd Edition Revised and Enlarged

BY

Hari Charan Das

Price Re. 1. *(full cloth Gilt.)*

A Universal Guide to the Art of Letter Writing for all positions of Life.

It contains Chapters on :—1. Notes and general Information, 2. Private Correspondence, 3. Receipt forms, 4. Bill forms, 5. Municipal Office, 6. Post Office department, 7. Postal department, 8. Income tax Office, 9. Railway Office, 10. Police Office Correspondence, 11. Enquiring about a missing article on the Tram-car, 12. Medical department, 13. Collector's Office Correspondence, 14. Correspondence with Attorneys, Vakils, Mukteārs etc., 15. Correspondence with Doctors, 16. Steamer Correspondence, 17. News paper Correspondence, 18. Commercial and Govt. Office Correspondence, 19. Miscellaneous Applications and forms, 20. Abbreviations and Daily Wages.

A copy of this book will dispense with the necessity of seeking the help of others for writing Letters, Applications, etc.

To be had of—**M. L. DAS CO.,**
122, *Baitakkhana Road, Calcutta.*

சில சிறந்த தமிழ்ப் புத்தகங்கள்

இராமாயண வினாவிடை — மூன்றாம் பதிப்பு

இதில் ராமாயணக் கதையின் ஏழுகாண்ட ஸாரமும், ஸந்தேஹமுண்டாகக்கூடிய நிலைமைகளுள்ளவிடத்து ஆக்ஷேப ஸமாதானங்களுடன் தீர்ந்த விசாரமும், நீதிகள் போதிக்கக்கூடிய விடத்து படிப்பினைகளும் காட்டி இயற்றப்பட்ட ஓர் இனிய நூல். சிறுவர் சிறுமிகளும் அறியுமாறு எளிய தமிழ் நடையில் எழுதப்பட்டிருப்பதன்றி, பெரியோரது மனதையும் களிப்பிக்குமாறு, அத்யாத்ம ராமாயணத்திலும், ஆநந்த ராமாயணத்திலும் கண்ட, இராமயணத்தின் உட்பொருளும் அநுபந்தமாக இப்புத்தகத்திர்குச் சேர்க்கப்பட்டுள்ளது. தமிழில் கம்பனெழுதிய கதைக்கும் வடமொழியில் வால்மீகி எழுதிய கதைக்குமுள்ள வேறுபாடுகள் மற்றோர் அநுபந்தமாக அமைக்கப்பட்டிருக்கிறது. இப்புத்தகம் பல பாடசாலைகளில் பாடபுத்தகமாக ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. யாவராலும் நன்கு மதிக்கப்படுகிறது. சின்னாட்குள்ளாகவே மூன்றாவது பதிப்பு வெளிவந்திருப்பதே இப்புத்தகத்தின் பெருமையை விளக்கும். நமது புத்தகத்திற்கென்றே இதுவரையும் கண்டிராத புதிய சித்திர படங்களுடன் ஒவ்வொரு காண்டமும் விளக்கப்பட்டிருக்கிறது. இது ம-ா-ா-ஸ்ரீ, அ. சி. கஸ்தூரிரங்கய்யர், பி. ஏ., எல். டி., அவர்களால் இயற்றப்பட்டது. புதிய பதிப்பு, படங்களுடன் — விலை ரு. 1.

ஸ்ரீமத் பாகவத வினாவிடை — முதல் பாகம்

முதலொன்பது ஸ்கந்தங்களின் கதை அடங்கியது. கபிலவாஸுதேவர், த்ருவர், ப்ராசீன பர்ஹிஸ், ரிஷபயோகி, ஜடபாதர், அஜாமிளன் முதலிய மஹான்களின் சரிதையும், ஸ்ருஷ்டி விஷயம், வருணாசிரம தருமங்கள் முதலிய விஷயங்களும், தக்ஷயாகம், கஜேந்திரமோக்ஷம் முதலிய உபாக்கியானங்களும் அமைந்திருப்பதன்றி மஹாப்பிரளயம் சாஸ்திரசிருஷ்டிக்கிரமம், சாஸ்த்ரபுராண ச்ருஷ்டிகளின் பொருத்தம், த்ரிமூர்த்திகளின் ஸமரஸம், நெடுங்கால அளவைகள் இவைகளைப்பற்றிய வியாஸங்களை அநுபந்தமாக உடையது. பரசுராமாவதாரம் வரையுள்ள கதை அடங்கி 10-உயர்ந்த சித்திரப்படங்கள் ஸ்கந்தத்திற் கேற்றவண்ணமடங்கியது. — விலை ரு. 1

ப்ரபாவதீ

இது வங்காளிபாஷையில் கனந்தங்கிய நரேந்திரநாதசட்டர்ஜி அவர்கள் இயற்றிய நவீனத்தின் தமிழ் மொழிபெயர்ப்பு. கஷ்டம் கூலிதரும், முயற்சித் திருவினையாக்கும் என்னும் படிப்பினையையும், நெடுங்காலங் கடந்தபின் நடக்கும் மணத்தினால் வரும் ஸுகம் இது முதலியவைகளைப்பற்றிய இனிய செந்தமிழ் நவீனம், ஸரளமாக எவரையும் எடுத்தபின் கீழ்வைக்க முடியாமல் படிக்கும்படி செய்யும் திறமையுள்ளது. ஸ்ரீ சைலதாதாசாரியாரால் இயற்றப்பட்டது. — விலை அணா 4.

ஜெனரல் ஸப்ளைஸ் கம்பெனி,
மைலாப்பூர், மதராஸ்.

இந்தியா, பர்மா, சிலோன் முழுமையும் பேயர்பேற்று யாவராலும்
அங்கீகரிக்கப்பட்ட கம்பெனி,

காதர் அண்டு யூசப் பிரதர்ஸ்

கெடியார வர்த்தகர்கள் இந்தியா கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தர்களுக்கு
கெடியாரம் சப்ளை செய்கிறவர்கள் நெ. 42. A. சென்னை. E.

நிக்கல் சில்வர் மேல் பார்வையில் மணிபார்க்கும்படியான கடியாரம் மேல் சாவி யுள்ளதுமான ஸ்காந்தமல்லாத (Non Magnetic) சர்தார் (Sirdar) லீவர் ரூபாய் 12, வெள்ளி 18.
Oxydised ரூ. 14.



நிக்கல் சில்வர் மேல் பார்வையில் மணிபார்க்கும்படியான கடியாரம் மேல் சாவி யுள்ளது ஸ்காந்தமல்லாத **(Non Magnetic)** **(Lever)** லீவர் ரூபாய் 8, வெள்ளி 14.

நெ. 101. நிக்கல் மேல்பார்வை யுள்ளதும் மேல்சாவி யுள்ளதும் டயல்மேல் சிவ்டம் லீவர் பேடண்டு மார்க்கு நடு அளவு 3 0 0

„ 1. நிக்கல் மேல்பார்வை யுள்ளதும், மேல்சாவி யுள்ளதுமான ரெயில்வே ரெகுலேட்டர் ரிஜிஸ்டர் கண்டயம் ஸ்டாம்பு 5 0 0

„ 104. வெள்ளி முழுமூடியுள்ளதும், மேல்சாவி அல்லது உள்சாவியுள்ளதும் சிறியது அல்லது நடு அளவுள்ளதுமான ஹண்டிங்க் கெடியாரம் 12 8 0

„ 10. வெள்ளி மேல்பார்வை யுள்ளதும் மேல்சாவி அல்லது உள்சாவி யுள்ளதும், 15-கெம்பு செதுக்கினதும் நடு அளவுள்ளதுமான பேடண்டு லீவர் கெடியாரம் 16 0 0

„ 108. வெள்ளி இரண்டு பக்கமும் மூடிபோட்டதும், மேல் சாவி அல்லது உள்சாவி யுள்ளதும் 15-கெம்பு செதுக்கினதுமான பேடண்டு லீவர் ½-ஹண்டிங் கெடியாரம் நடு அளவுள்ளது 20 0 0

N. B.—இன்னும் வெஸ்டு எண்டு ஜான்பாரல் முதலிய கம்பெனியரால் செய்யப்பட்ட பலவிதமான கெடியாரங்களும், வெள்ளியிலும், பொன்னிலும் 150-ரூபாய் விலைவரையில் இக் கம்பெனியில் கிடைக்கும். கேட்லாக் தபால் சார்ச்சு இல்லாமல் அனுப்பப்படும். ஒவ்வொரு கெடியாரத்துடன் ஒரு வெல்வெட் பெட்டி ஒரு கண்ணாடி, ஒரு மெயின் ஸ்பிரிங்கும், வில், காரண்டி பத்திரமும் கொடுக்கப்படும்.

Printed by G. C. Loganadham Bros. at the Guardian Press, Mount Road, Madras.